# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 8 ● இதழ் 40 ● 13 நவம்பர் 1970 ● பக்கங்கள் 8 ● விலை சதம் 15


## மாசேதுங் சிந்தனை

கம்யூனிஸ்டுகள் பாட்டாளி வர்க்கத்தின் பரிபூரண உணர்வுடையவர்களாக இருக்க வேண்டும். அவர்கள், புகழையோ அல்லது லாபத்தையோ தேடிச் செல்லக்கூடாது. கஷ்டத்திற்கோ அல்லது மரணத்திற்கோ அஞ்சக் கூடாது. புரட்சிக்கும் மக்களுக்கும் அவர்கள் பரிபூரணமாக அர்ப்பணிக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள், சீனாவின் மக்களுக்கும் உலகத்து மக்களுக்கும் இதயபூர்வமாகச் சேவை செய்கிறார்கள். அவர்கள் புரட்சிக்கு எல்லையற்றளவு விஸ்வாசமாக இருப்பதுடன், மக்களுக்காக உடலும் உள்ளமுமாக கடுமையாக உழைக்கிறார்கள்.

# யு. என். பி.யும் 4,39,950 ரூபாயும்

**யு. என். பி. யின் முன்னாள் அமைச்சர் ஒருவர் யு. என். பி. பத்திரிகையான "சியரட்ட" வின் பெயரில் லட்சக்கணக்கான ரூபாய் கொண்ட பழைய நோட்டுக்களை வங்கியில் போட்டு புதுக் கணக்குத் திறந்தது பற்றி யு. என். பி. தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா பாராளுமன்றத்தில் விடுத்த அறிக்கை ஒரு நொண்டிச் சாக்காகும்.**

தேர்தல் நிதியிலிருந்து ஏறக்குறைய 4 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மிஞ்சியுள்ளது என்ற கதையை நம்புவதற்கு எதையும் நம்பும் அப்பாவித்தனம் தேவை. தேர்தல் செலவுபோக மிஞ்சிய தொகை 4,40,000 ரூபாயாக இருந்தால், தேர்தலுக்கு மொத்தம் எவ்வளவு செலவு செய்யப்பட்டிருக்கும் என்று அறிவது சுவாரஸ்யமாக இருக்கும். தேர்தலில் செலவு செய்யக்கூடிய மொத்தத் தொகை பற்றிய சட்டத்திற்கு இது அமைந்திருக்குமா என்ற கேள்வியும் ருசிகரமானது. இவ்வளவு தொகை தேர்தலுக்குச் செலவிட்ட பின்னும் கிடைத்த பலன் தேர்தல் முடிவுகளோடு ஒத்துப் போகிறதா என்பதும் சுவையான விஷயம்.

மிக முக்கியமான கேள்வி என்னவென்றால், புதுநோட்டு வருவதற்கு முன்பே இந்தப் பணம் வங்கியில் ஏன் போடப்படவில்லை என்பதாகும். அது மட்டுமல்ல, 4,40,000 ரூபாயும் எப்படி 100, 50 ரூபாய் நோட்டுக்களாய் இருந்தன?

யு. என். பி. யின் பொருளாளர் யார்? இவ்வளவு பணமும் அவர் கையில்தான் இருந்ததா? டட்லியின் மிக நெருங்கிய சகாவான முன்னாள் ஒலிபரப்பு அமைச்சரே இத்தொகையை வங்கியில் செலுத்தப்போனது ஏன்?

அரசியல் கட்சிகளின் நிதி விபரங்களில் தலையிடக் கூடாது என்ற சாட்டில், இந்த விஷயம் பற்றி அரசாங்கம் எதுவித சிரத்தை எடுக்காமலும், இதனை மூடி மறைக்கும் விதத்திலும் நடந்து கொள்ளலாம். ஆனால், மேலே எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு அளிக்கப்பட்ட விடைகள் மக்களுக்கு எதுவிதத்திலும் திருப்தியளிப்பனவாக இல்லை. கண்ணாடி மாளிகையில் உள்ளவர்கள் மற்றவர்களின் வீடுகளுக்கு கல்லெறிவது ஆபத்து.

## மிளகுசேனை தோட்டத்தில் வேலைநிறுத்தம்

நானுஓயா மிளகு சேனை தோட்டத்தில் கடந்த 16ந் திகதியிலிருந்து வேலைநிறுத்தம் நடைபெறுகிறது. இளம் பெண்கள் தமது வேலை முடிந்ததும் கொழுந்துச் சாக்குகளை பெக்டரிக்குக் கொண்டுவர வேண்டும் என்ற நிர்பந்தத்தை தோட்ட நிர்வாகம் கடைப்பிடித்து வந்தது.

அண்மையில் இரு இளம் பெண்கள் தமது கொழுந்துச் சாக்குகளை பெக்டரியின் மேல் தட்டுக்குக் கொண்டு சென்றபோது, தோட்டத்துரையும், டீமேக்கரும் அவர்களை வழிமறித்து பலாத்காரம் செய்ய முயன்றதாகவும், அதற்கு டிரைவர் ஒருவனும் உடந்தையாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இதை எதிர்த்தே இவ் வேலை நிறுத்தம் நடைபெறுகிறது. இனிமேல் இளம் பெண்கள் பெக்டரிக்கு கொழுந்துச் சாக்குகளை கொண்டு செல்ல அனுமதிக்க மாட்டோம் என்ற முக்கிய கோரிக்கையை முன்வைத்துப் போராடும் தொழிலாளர்களில் பெரும் பகுதியினர் செங்கொடி சங்கத்தைச் சேர்ந்தவர்களாவர்.

# எம். பி.களுக்கு புதிய கார்கள் இதுவா சிக்கனம்?

சோஷலிஸத் துரோகி என். எம். பெரேரா தனது வரவு-செலவுத் திட்ட பிரசங்கத்தின்போது, மக்களின் சிந்தனை சிக்கன வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்று உபதேசம் புரிந்ததும், மக்கள் தமது உணவு, உடைத் தேவைகளுக்கு இலங்கையில் உற்பத்தியாகும் பொருட்களையே உபயோகிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்ததும் தெரிந்ததே.

'நமக்கல்லடி உபதேசம், ஊருக்கடி' என்று ஒரு கபடதாரிப்போதகன் மனைவிக்குச் சொன்னதாக ஒரு கதை உண்டு. அதுபோலத்தான் இருக்கிறது நிதியமைச்சரின் உபதேசம். மக்களிடமிருந்து விலகி, பாராளுமன்றத்தில் உள்ள குளிரூட்டப்பட்ட தமது அறைகளில் இருக்கும் ''மக்கள் பிரதிநிதிகளுக்கு'' இந்த உபதேசம் தள்ளுபடி போலும். ஏனெனில், சகல பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் பிரெஞ்சு பேஜோ கார்கள் அளிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது. ரகங்களுக்கு ஏற்ப 21 ஆயிரம் ரூபாயிலிருந்து 31 ஆயிரம் ரூபாய் வரையுள்ள இக் கார்களை மாதா மாதம் செலுத்தக்கூடிய கடன் வசதிகள் மூலம் அளிக்க வேண்டும் என்ற ஆலோசனையும் அடிபடுகிறது.

எம்.பி. மார்களுக்கான இக் கார்களின் மொத்த விலை 45 லட்சம் ரூபாய்கள் வரை போகக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரெஞ்சு அரசாங்கம் இலங்கைக்கு அளித்துள்ள நாலரைக் கோடி ரூபாய்வரையுள்ள பொருள் உதவித்திட்டத்திலிருந்தே இக்கார்களுக்கான செலவுத்தொகை பெறப்படும். பொருள் உதவித் திட்டத்தின் நோக்கமே மக்களுக்கு மிகவும் தேவையான- இன்று கிடைப்பதற்கு அரிதான - அத்தியாவசியப் பாவனைப் பொருட்களை இறக்குமதி செய்து வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்காகும். இப்பொருள் உதவித்திட்டம், மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே பாராளுமன்றம் போயிருப்பதாக தம்பட்டம் அடித்துக் கொள்ளும் எம். பி. மார்களுக்கு உல்லாச வாகனங்கள் வாங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது அல்ல என்பது நிச்சயம்.

மேலிடத்திலுள்ளவர்கள் முன்மாதிரியாக இல்லாவிடில் ''சிக்கன வாழ்க்கை'' என்ற கோஷத்திற்கு அர்த்தமே இல்லை. இது விஷயமாக சில வாரங்களுக்கு முன்பு அரசாங்கத்திற்குச் சார்பான 'நேஷன்' என்ற பத்திரிகை குறிப்பிட்டுள்ளதை அப்படியே கீழே தருகின்றோம்.

''சிக்கனம் மேலிடத்திலிருந்துதான் தொடங்க வேண்டும். எம். பி. மார்களுக்கு அதிக அலவன்ஸ், புதிய பங்களாக்கள், கார்கள் ஆகியனவும், அமைச்சர்களுக்கும் அவர்களுடைய பரிவாரங்களுக்கும் வெளிநாட்டுப் பயணங்களும், சங்கீதம் ஆரம்பத்திலேயே பிழையான சுருதியில் தொடங்குவதைக் காட்டுவதாய் அமைந்துள்ளது. இவையெல்லாம் ஒழிக்கப்படல் வேண்டும். 'அதிமுக்கிய பேர்வழிகளுக்கு' இது முடியாவிட்டால், சிக்கனத்தைப்பற்றி உபதேசம்புரிய அவர்கள் எத்தனிக்கக்கூடாது. சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய காலகட்டத்தில் சலுகை பெறும் கூட்டம் ஒன்றை நாம் அனுமதிக்கக் கூடாது.''

இந்தப் புத்திமதி அரசாங்கத்திற்குச் சார்பான இடத்தி

8-ம் பக்கம் பார்க்க

## முக்கிய அறிவிப்பு

அண்மைக் காலத்தில் அடிக்கடி தாளின் விலை கூடிய போதிலும் ''தொழிலாளி''யின் விலையில் மாற்றம் செய்யவில்லை. எனினும், பட்ஜெட்டுக்குப் பின் தாளின் விலையும், தபால் செலவினங்களும் அதிகரித்திருப்பதால் ''தொழிலாளி''யின் விலையில் 5 சதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இவ் வாரத்திலிருந்து ''தொழிலாளி'' ஒரு இதழின் விலை 15 சதமாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

— நிர்வாகி

# தனி இனக் கோரிக்கை படு பிற்போக்கானது

# மக்களைக் கூறுபோட திரிபுவாத எம். பி. முயற்சி

கடந்த சில நாட்களாக நியமன உறுப்பினர் திருவாளர் எம். சி. சுப்பிரமணியம், அரசியல் நிர்ணய சபைக்கு சமர்ப்பித்த தனி இனக் கோரிக்கை பற்றிய பேச்சு பரவலாக மக்களிடையே அடிபடுகின்றது. சில சமயங்களில் 'தனி இனக் கோரிக்கையல்ல' தனிச் சமூகக் கோரிக்கையே நாம் கேட்பது என்றும் சிறுபான்மைத் தமிழர் மகாசபை கூறுகின்றது. தாம் கோருவது தனித் தேசிய இனமா? அல்லது தனிச் சமூகமா? என்பது அவர்களுக்கே தெளிவில்லை.

இது எப்படி இருப்பினும், அவர்களின் கோரிக்கை நியாயமான தொன்ருக ஒடுக்கப்பட்ட மக்கள் கருதவில்லையென்பதை அவர்களிடமிருந்து கிளம்பும் கண்டனங்கள் தெரிவிக்கின்றன. 'ஐந்தரை லட்சம் ஒடுக்கப்பட்ட மக்களின் முடி சூடா மன்னன் நானே' என மார்தட்டி, அவர்களின் விழிப்புணர்ச்சியின் பயனுக சாதி வெறிக்கும், நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிராகப் போராடி வீரத்தியாகங்கள் பல புரிந்த ஒடுக்கப்பட்ட மக்களை சிங்கள தேசிய முதலாளித்துவ ஆட்சியாளருக்குக் காட்டி, நியமன உறுப்பினர் என்ற எலும்புத்துண்டை பெற்றுக்கொண்ட திருவாளர் எம். சி. சுப்பிரமணியம், ஒடுக்கப்பட்ட மக்களைத் தொடர்ந்தும் அந்நிலையில் வைத்திருப்பதன் மூலம்தான் தனது சொந்த நலன்களைப் பேண முடியும் என்று எண்ணுவதில் அதிசயம் எதுவும் இல்லை.

ஏனெனில் அவருடைய வரலாறு அப்படிப்பட்டது. வடபகுதியில் சாதிவெறியர்களின் பலாத்காரத்திற்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் கிளர்ந்தெழுந்து புரட்சிகர எதிர்ப் பலாத்காரத்தைப் பாவித்து வீரப் போராட்டம் நடாத்திக் கொண்டிருந்த வேளை, இப் போராட்டங்களுக்கும், தனக்கும் ஒட்டுமில்லை, உறவுமில்லை என்று ஆட்சியாளர்களுக்கும், பிற்போக்கு சாதி வெறியர்களுக்கும் பறை சாற்றிக் கொண்டதன் மூலம், 'ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், தனக்கும் ஒட்டும் இல்லை-உறவுமில்லை' என்று பிரகடனப்படுத்திய அவர் இன்று ஒடுக்கப்பட்ட மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடிப்பதும், அவர்களுக்காக கோரிக்கை விடுப்பதாகக் கூறிக் கொள்வதும், அசல் சந்தர்ப்பவாதத்தினதும், வடிகட்டிய சுய நலத்தினதும்பாற்பட்டதாகும். இப்படியான குணுதிசயத்தைக் கொண்ட அவருக்கு ஐந்தரை லட்சம் மக்களின் தலைவன் என்று கூறப்படுவதற்கும், அவர்களின் சார்பாக எவ்வித கோரிக்கைகள் விடுப்பதற்கும் அணுவளவேனும் உரிமை கிடையாது. இப்படிப்பட்ட கோரிக்கைகளை ஒடுக்கப்பட்ட மக்கள் விரும்பவும் இல்லை.

இந் நிலையில் பார்க்கும் போது திருவாளர் எம். சி. சுப்பிரமணியம் இவ்வித கோரிக்கையை விடுவதன் நோக்கம் என்ன? இவர் வகுப்பு வாதத்தை முன் வைத்து அரசியல் பிழைப்பு நடத்தப் பார்க்கும் இன்னொரு ஆர். ஜி. சேனநாயக்காவாக முயற்சிக்கிருரா? அல்லது மக்களைக் கூறு போட்டு அவர்களை நிரந்தர எதிரிகளாக்கவும், இதே நேரத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்திற்கு அணைபோட்டு அவர்களின் நெற்றியில் அடிமைச் சின்னங்களை நிரந்தரமாக எழுதி வைக்கவும் விரும்புகின்ருரா? அத்துடன் உயர்சாதிச் சமூகத்தினர் அனைவரையும் சாதிவெறியர்கள் என்ற தனது குருட்டுப்பார்வையை முன் வைத்து தான் புத்திசுவாதீன மற்றவர் என்று நிரூபிக்க முயல்கிருரா?

ஒடுக்கப்பட்ட மக்களோடு தொடர்பு, இல்லாத ஒருவர் அவர்களின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காத ஒருவர்—அவர்களின் போராட்டங்களை காலத்துக்குக்காலம் காட்டிக் கொடுத்த ஒருவர்—தனது இப் பணியின் சிகரமாக தனி இன, அல்லது தனிச் சமூகக் கோரிக்கையை முன்வைத்து மக்களின் சிந்தனையை திசை திருப்பி அவர்களைப் பிளவு படுத்தும் இம் முயற்சியையிட்டு எமது நிலையம் மிகுந்த கவலையடைவதோடு தனது வன்மையான கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

மேற்கண்டவாறு மோகனதாஸ்சனசமூக நிலையம் விடுத்த அறிக்கை கூறுகிறது.

# புரட்சிகர சிந்தனையை தூண்ட வேண்டும்

"நிலப்பிரபுத்துவத்தின் சாபக்கேடான சமூகக் கொடுமைகளுக்கும், முதலாளித்துவத்தின் சுரண்டலுக்கும் உட்பட்டு, இச் சமுதாயத்தின் அடித்தளத்தில் உழன்று கொண்டிருக்கும் மக்களின் முன்னேற்றத்திற்கும், நல் வாழ்வுக்குமான பாதையைச் சுட்டிக்காட்டும் வகையில் இன்றைய தினம் நடைபெற்ற கட்டுரைப் போட்டியும் பேச்சுப் போட்டியும் அமைந்திருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும். இத்தகைய போட்டிகளின் மூலம் மாணவர்களும், இவ் வைபவங்களில் கலந்துகொள்ளும் பெருந்தொகையான பொது மக்களும் பெரும் பயன் அடைய முடியும்."

இவ்வாறு, மட்டுவில் மோகனதாஸ் நூல்நிலையத்தில் தலைவர் திரு. வெ. யேசுதாஸன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கட்டுரை, பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு பரிசு வழங்கிப் பேசிய 'தொழிலாளி' ஆசிரியர் திரு. இளங்கீரன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் "பாடசாலைகளில் உள்ள மாணவர் மன்றங்களாலும், சனசமூக நிலையங்கள் போன்ற பொது ஸ்தாபனங்களாலும் காலத்திற்குக் காலம் இத்தகைய போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றதாயினும், இவை மாணவர்களின் சிந்தனையை பிற்போக்கான, சமூகத்திற்குப் புறம்பான வழிகளில் இட்டுச் செல்லவே உதவி வந்துள்ளன. மாருக இத்தகைய போட்டிகள் இச் சமூக அமைப்பை மாற்றி வர்க்க பேதமற்ற—ஏற்றத்தாழ்வற்ற ஒரு புதிய சமுதாயத்தை, புதிய உலகைத் தோற்றுவிப்பதற்கான இலட்சிய வேட்கையை மாணவர்கள் மத்தியில் தோற்றுவிப்பதாக அமைய வேண்டும். இது போன்ற போட்டிகளில் பரிமாறப்படும் கருத்துக்களும், ஆராயப்படும் விஷயங்களும் மக்களை இயக்கி, செயலுக்குத் தூண்டுவதாக அமையவேண்டும். இத்தகைய புதிய, புரட்சிகரமான சிந்தனைகளை மக்கள் மத்தியில் சனசமூக நிலையங்கள் தூண்டுவதன் மூலம்தான் எதிர்காலச் சமுதாய மாற்றத்திற்கு சனசமூக நிலையங்கள் தம் பங்கைச் செலுத்த முடியும்.

மற்றும் திரு கே. டானியல் திரு. க. முருகேசு ஆகியோரும் பேசினர்.

# பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்திற்கு ஈழ மக்களின் ஆதரவு என்றும் உண்டு

## யாழ். அல்பதாஹ் ஆதரவு முன்னணி அறிக்கை

பாலஸ்தீனத்தை விடுதலை செய்யவும், ஏகாதிபத்திய சிருஷ்டியான இஸ்ரேலை அழித்தொழிக்கவும், பாலஸ்தீனர்களும் ஏனைய அரபு மக்களும் நடத்துகின்ற விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தும் அமெரிக்க ஏகாதிபத்தியமும், சோவியத் ரஷ்யாவும் கூட்டாக திணித்த போலிச் சமாதானத் திட்டத்தைக் கண்டித்தும் யாழ்ப்பாணம், "அல்பதாஹ்" ஆதரவு முன்னணி, இவ்வறிக்கையை வெளியிடுகின்றது.

இன்று முழு உலகையும் கவர்ந்துள்ள முக்கிய விடயங்களுள் ஒன்ருகிய பாலஸ்தீனப் பிரச்சினை உலகப் புரட்சியின் ஒரு அங்கமாக மாறிவிட்டது. சகல நாட்டுப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் இன்று பாலஸ்தீன விவகாரமே தலைதூக்கியுள்ளதைக் காணலாம். "ஆழம் அறியாமல் காலை விட்டவன்" கதையாகவே அமெரிக்க, பிரிட்டிஷ் கைக்கூலியான ஹுசைனின் கதையும் அமைந்து விட்டது. தாய் நாட்டை விடுதலை செய்யும் நோக்கை இலக்காகக் கொண்ட பாலஸ்தீன அராபிய மக்களின் பொங்கி எழும் புரட்சிகர போராட்ட உணர்வை மழுங்கடிக்கவும், பாலஸ்தீன விடுதலை முன்னணியினரையும், "அல்பதாஹ்" வீரர்களையும் பூண்டோடு அழிக்கவும், அமெரிக்க ஏகாதிபத்தியமும் ரஷ்ய சமூக ஏகாதிபத்தியமும் ஐ. நா. சபை மூலம் "சமாதானத்" தீர்வு, சமரசத் திட்டம் என்ற தமது வழமையான கோமாளித் திட்டத்தின் மூலம் முனைந்துள்ளார்கள். ஆனுல் "சமாதானத்" திட்டத்தை ஏற்பதில்லை; ஏந்திய ஆயுதத்தை கீழே வைப்பதில்லை, உடலில் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரையும் எதிரிக்கு அடிபணிவதில்லை என பாலஸ்தீனர்களாகிய நீங்கள் பூண்டுள்ள 'உறுதியான இம்முடிவை நாம் மனப்பூர்வமாக வரவேற்கின்ருேம். சமாதானம் என்ற மாயப் போர்வையில் பாலஸ்தீன அரபுகளின் தேசிய விடுதலை ஜுவாலையை அணைப்பதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியமும், சோவியத் ரஷ்யாவும் எடுக்கும் சகலவித சூழ்ச்சிகளையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்ருேம்.

மேலும் இப் போலித் திட்டத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம் காலஞ்சென்ற எகிப்திய ஜனதிபதி நாஸரும், அம்மான் கசாப்புக்கடைக்காரன் ஹுசைன் போன்ருேரும் செய்துள்ள தமது வழமையான காட்டிக் கொடுப்பையும், கழுத்தறுப்பு வேலைகளையும் நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்ருேம். எனினும் இப்படியான சதி வேலைகளிலும் தோல்வியடைந்து கொண்டிருக்கும் பிற்போக்குவாதிகளும் அவர்களது கைக்கூலியான ஹுசைனும் தங்களது இராணுவ அடக்கு முறைகளால் பாலஸ்தீன தேசிய விடுதலை முன்னணியினரை பூண்டோடு அழித்திட முயற்சித்துள்ளனர். ஆனுல் சகல பிற்போக்குவாதிகளும் இத் திட்டத்தில் தோல்வியடைவர் என்பது திண்ணம். இறுதியில் வெற்றியடைவது எமது அராபிய சகோதரர்களேயாவர். ஜோர்டான் பிற்போக்குவாத இராணுவம் இன்று பாலஸ்தீன அகதிகள் முகாம்களை அழித்துள்ளது. அவர்களது உடைமைகளை சேதப்படுத்தியுள்ளது. பாலஸ்தீன அகதிகளை எங்கு கண்டாலும் சுட்டுத் தள்ளினர். எனினும் மக்கள் இன்று சகலவித கஷ்டங்களையும் கடந்து, தியாகத்திற்கு அஞ்சாது, உறுதியுடன் போராடுகின்ருர்கள். இன்று அவர்கள் நடத்தும் இஸ்ரேலிற்கும் ஏனைய ஹுசைன் போன்ற பிற்போக்குவாதிகளுக்கும் எதிரான போராட்டம் வீண் போகாது. பாலஸ்தீன தேசிய விடுதலை முன்னணியிடம் வேகமாக மாட்டிக் கொண்ட ஜோர்டான் பிற்போக்கு—பாஸிஸ்ட் ராணுவ அரசு, ஏகாதிபத்திய நாடுகளை உதவிக்கு அழைக்கின்றது. ஆனுல்–

இந்த யுகம் உலக ஏகாதிபத்திய தலைமை ஆதிக்கம் அழித்தொழிக்கப்படும் யுகமாகும். தமது தலைவிதியை தாமே நிர்ணயிக்கும் யுகமாகும். ஆகவே இந்த உள்நாட்டு பிரச்சினையில் தலையிட நினைத்தால் அது பாரதூரமான விளைவுகளை உண்டாக்கும் என நாம் ஏகாதிபத்திய தலைமையதிகார வெறிபிடித்த நாடுகளுக்கு எச்சரிக்கை செய்கின்ருேம். இந்த உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிட முயலும் ஏகாதிபத்திய நாடுகளின் (அமெரிக்கா, ரஷ்யா) செயலையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்ருேம்.

பெரும் வல்லரசுகள் எனப்படுபவைகள் பாலஸ்தீன மக்களுக்கு சுயநிர்ணயம் அளிக்க மறுக்குமானுல் பாலஸ்தீன மக்களுக்கும், அவைகளுக்கும் இடையிலுள்ள ஒரே பாஷை, துப்பாக்கி ரவைகளும் குண்டுகளும்தான்!

உங்களது நியாயமான, உறுதியான விடுதலைப் போராட்டத்தை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கின்ருேம். சொந்தக் காலில் நின்று சொந்தக் கரங்களில் துப்பாக்கி ஏந்தி போராடும் உங்களுக்கே பாலஸ்தீனம்!

ஏகாதிபத்தியத்தின் சிருஷ்டியான இஸ்ரேலையும், அதன் பின் நிற்கும் சக்திகளையும் அழித்தொழிக்க திடசங்கற்பம் பூண்டுள்ள உங்களுக்கு இலங்கை மக்களின் ஆதரவும், நல்லாசிகளும் என்றென்றும் உண்டு.

"பாலஸ்தீனம் என்றும் பாலஸ்தீனர்க்கே!"

"இறுதி வெற்றி பாலஸ்தீனர்க்கே!"

"அல்பதாஹ்" இயக்கம் வாழ்க!"

# புரட்சிகர புத்திஜீவிகளுக்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் அறைகூவல்

இந்நாட்டு புத்திஜீகள் மத்தியில், அதாவது, வாலிபர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் மத்தியில்—இந்நாட்டு வரலாற்றில் முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு புரட்சிகர விழிப்புணர்வு நிலவுகிறது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. இந் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிதான் இதற்கு அடிப்படைக் காரணமாகும். வாலிபர்கள் தமது கல்வி முடிவடைந்ததும், சிறந்த எதிர்காலத்தை எதிர்பார்த்து கட்டிய மனக்கோட்டைகளையெல்லாம் இப் பொருளாதார நெருக்கடி உடைத்தெறிந்து விட்டது.

இலங்கையில் ஏழு லட்சத்திற்கும் அதிகமானோர் வேலையில்லாமல் இருப்பதாக நிதியமைச்சர் கூறியுள்ளார். ஆனால், வேலையில்லாமல் இருப்போரின் தொகை இதிலும் பார்க்க அதிகமாகும். வேலையில்லாமல் இருப்போரில் கணிசமானோர் ஒரளவு படித்தவர்கள். அதிகரித்து வரும் ஜனத் தொகையினால் வருடந்தோறும் ஏறக்குறைய இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டோர் மேலும் வேலையற்றவர்களாகின்றார்கள். இதிலிருந்து இப்பிரச்சினையின் விஸ்வரூபத்தையும், அதன் தாக்கத்தையும் உணர்ந்து கொள்ளலாம். நத்தை வேகத்தில் உருவாக்கப்பட்டு வரும் வேலை வாய்ப்புக்கள் இந்தப் பிரச்சினையை எதுவிதத்திலும் தீர்க்கப் போவதில்லை.

இரண்டாவதாக, நம் நாட்டு புத்திஜீவிகள், உலகில் உருவாகி வரும் சாதகமான புரட்சிகர இயக்கத்தினால் ஈர்க்கப்படுகிறார்கள். அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகவும், அவர்களுடைய அடிவருடிகளுக்கு எதிராகவும் வியட்நாம், மக்களும் இந்தோசீன மக்களும் நடத்துகின்ற வீரஞ்செறிந்த போராட்டம் இவர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, பெரும் உந்துதலையும் அளித்துள்ளது. அமெரிக்க ஆதரவில் உள்ள இஸ்ரேல் அரசிடமிருந்து பாலஸ்தீனத்தை விடுதலை செய்வதற்காக, பாலஸ்தீன மக்களும் ஏனைய அரபு மக்களும், நடத்துகின்ற போராட்டமும், ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் தேசிய விடுதலைக்காக நடத்தப்படுகின்ற போராட்டங்களும், மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா போன்ற பகுதிகளில் மாணவர்களும் தொழிலாளர்களும் நடத்துகின்ற போராட்டங்களும், ஆபிரிக்க அமெரிக்க மக்கள் தமது ஆயுதப் போராட்டங்களின் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மார்பில் செலுத்தியுள்ள ஈட்டிகளும் நம் நாட்டுபுத்திஜீவிகளை பெரிதும் கவர்ந்துள்ளன.

இப் போராட்டங்கள் சமாதான சகஜீவனம், சமாதானப் போட்டி, பாராளுமன்றத்தின் மூலம் சமாதான சோஷலிஸ மாற்றம் போன்ற நவீன திரிபுவாத கருத்துக்களை தவிடுபொடியாக்கியுள்ளன. மரம் அமைதியை விரும்பலாம், ஆனால் காற்று என்றும் ஓய்வதில்லை. நவீன திரிபுவாதிகளும், ஏனைய சீர்திருத்தவாதிகளும், ட்ரொட்ஸ்கியவாதிகளும் வர்க்க சமரசத்தையும், சமாதான சகஜீவனத்தையும் விரும்பலாம். ஆனால் வர்க்கப் போராட்டம் வாழ்வை வேறு பாதையில் செலுத்திச் செல்கிறது. ஏனைய நாடுகளைப் போன்று இலங்கையிலும் நிலைமை இதுதான்.

## திசை திருப்பும் முயற்சி

எனவேதான், இந்நாட்டில் வாலிபர்களையும், குறிப்பாக புத்திஜீவிகளையும் திசை திருப்புவதற்கு பெருமுயற்சி எடுக்கப்படுகிறது. இந் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் உண்மையான காரணத்தை தெரிந்துகொள்ள வேண்டும். தம்மிடமிருந்து எதிர்காலம் பறிக்கப்படுவது ஏன் என்பதை வாலிபர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதிகரித்துவரும் வேலையில்லாத் திண்டாட்டம், நாளும் பொழுதும் ஏறிச்செல்லும் வாழ்க்கைச் செலவு, வெளிநாட்டுச் செலாவணியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி, தேசிய வருமானத்தில் பற்றுக்குறை ஆகிய இத்தனையும் இந் நாட்டில் உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து தோன்றுகின்றன. இந் நாட்டுப் பொருளாதாரம் அந்நிய ஏகாதிபத்தியத்தின் மீது தொடர்ந்தும் தொங்கிக் கொண்டிருப்பது தான் இந் நெருக்கடிக்கு முக்கிய காரணம். 22 வருட ''சுதந்திரத்'' திற்குப் பின்பும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் விட்டுச் சென்ற அரைக் காலனித்துவ தோட்டப் பொருளாதாரமே இன்றும் இருந்து வருகிறது. நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்புகளான தோட்டங்கள், வங்கிகள், வர்த்தக ஸ்தாபனங்கள், ஏற்றுமதி—இறக்குமதி நிறுவனங்கள், கப்பல் கம்பெனிகள் ஆகியவற்றில் பெரும்பாலானவை இன்றும் அந்நிய ஏகாதிபத்திய வாதிகளின் கையில்தான் உள்ளன.

## முப்பெரும் மலைகள்

தேயிலைச் செடியை நடுவதற்காக மலையுச்சிகளில் இருந்த காடுகளை அந்நிய ஏகாதிபத்தியவாதிகள் வெட்டிச் சரித்ததினால் மண்ணரிப்புப் பிரச்சினை வேறு தோன்றியுள்ளது. இந் நாட்டு நீர்ப்பாசனப் பிரச்சிக்கு முடிவுகண்டு, உணவில் சுயதேவையைப் பூர்த்தி செய்வதற்கு மண்ணரிப்பு ஒரு முக்கிய முட்டுக்கட்டையாக இருக்கிறது.

இலங்கை மக்களின் முதுகில் அழுத்திக் கொண்டிருக்கின்ற முப்பெரும் மலைகளான அந்நிய ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், பெருமுதலாளித்துவம் ஆகியவற்றின் பிடியிலிருந்து இந் நாட்டுப் பொருளாதாரத்தை விடுவிக்காமல் தேசியப் பிரச்சினை ஒன்றைத் தானும் தீர்க்க முடியாது. இந்த மும்மலைகளுமே நம் நாட்டு மக்களின் பிரதான எதிரிகள். இந்தப் பொது எதிரிக்கு எதிராக, ஐக்கியப் படுத்தக்கூடிய சக்திகள் அனைத்தையும் ஐக்கியப்படுத்துவது நமது முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும்.

## மூலதனத்தின் அரசு இயந்திரம்

அத்தோடு அந்நிய ஏகாதியத்தியம், நிலப்பிரபுத்துவம், பெருமுதலாளித்துவம் ஆகியன இந்நாட்டையும், இந் நாட்டு மக்களையும், இந்நாட்டு வளத்தையும் தொடர்ந்தும் சுரண்டுவதற்கு. சுரண்டும் வர்க்கங்கள் கட்டி எழுப்பியுள்ள அரசு இயந்திரம் பாதுகாப்பளிக்கிறது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த அரசு இயந்திரத்தின் முக்கிய அங்கம் ஆயுதப் படைகளாகும். ஏனையவை சட்டமன்றங்கள், சிறைச்சாலைகள், உயர்ந்த சம்பளம் பெறும் அதிகார வர்க்கம் போன்றவையாகும். இந்த அரசு இயந்திரத்தின் கையில் தான் உண்மையான அரசு அதிகாரம் இருக்கிறது. வேலை நிறுத்தங்களில் பங்கெடுத்துக் கொள்கின்ற ஒவ்வொரு தொழிலாளியும் இதனை அறிவான்.

மூலதனத்தின் அப்பட்டமான சர்வாதிகாரத்தை மூடிமறைப்பதற்காக சுரண்டும் வர்க்கங்களினால் உருவாக்கப்பட்ட ஆபரணமே பாராளுமன்றமாகும். மக்களைப் பிளவுபடுத்தி அவர்களை மடையர்களாக்குவதற்கும், பாராளுமன்றத்தின் மூலம் சமாதானமாக சோஷலிஸ மாற்றத்தை ஏற்படுத்தலாம் என்ற மாயையைப் பரப்பி தொழிலாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வை மழுங்கடிப்பதற்கும், உண்மையான அதிகாரபீடமான ஆயுதப் படைகளிடமிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்புவதற்கும் சிருஷ்டிக்கப்பட்ட கருவியே பாராளுமன்றமாகும். ஆயுதப் போராட்டத்திற்குப் பதில் வார்த்தைப் போராட்டத்தை உருவாக்கும் முயற்சியே இது.

இன்றுள்ள ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவ, பெருமுதலாளித்துவ அமைப்பை உடைத்தெறியாமல் இதற்குப் பாதுகாப்பளிக்கும் அடக்குமுறை அரசு இயந்திரத்தை நிர்மூலமாக்காமல்—முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயக விளையாட்டின் மூலம் பதவிக்கு வரும் எந்த அரசாங்கத்தினாலும் மக்களுடைய அடிப்படைப் பிரச்சினை எதையுமே தீர்க்க முடியாது என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். 1947ம் ஆண்டு தொடக்கம் பாராளுமன்றத்திற்குள்ளே சேனநாயக்கா—பண்டாரநாயக்கா குடும்பங்களுக்கிடையில் சங்கீதக் கதிரை விளையாட்டு தொடர்ந்து நடைபெறுகிறது. இந்த இரு குடும்பங்களும் மாறிமாறி இலங்கையை ஆண்டு வருகின்றன. ஆனால், அடிப்படைப் பிரச்சினை ஒன்றைத்தானும் இவை தீர்த்து வைக்கவில்லை. இன்றைய அரசாங்கம் தன்னை ஒரு சோஷலிஸ அரசாங்கம் என்று கூறி மக்களை ஏமாற்ற முயற்சிக்கிறது. மே 27ல் ஈட்டிய வெற்றிக்குப் பின்னர் அரசியல், பொருளாதார, சமூக அடிப்படைகளில் எந்தவிதமான ஒரு மாற்றமும் ஏற்படவில்லை—ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, பெரு முதலாளித்துவ சுரண்டல் தொடர்ந்தும் நடந்து வருகிறது.

## துண்டித்துக்கொள்ள வேண்டும்

பாராளுமன்ற சமாதான மாற்றத்தின்மூலம் ஒருவித புரட்சிகர மாற்றத்தையும் கொண்டுவர முடியாது என்பதனால்தான் இந்த நிலைமை தொடர்ந்தும் நிலவுகின்றது. முதலாளித்துவ பாராளுமன்ற ஜனநாயக அபினை மக்களுக்கு ஊட்டுவதன் மூலம் சமசமாஜத் தலைமையும், கெனமன் திரிபுவாதக் கும்பலும் இந் நாட்டின் உழைக்கும் மக்களுக்கு படுதுரோகத்தை இழைக்கின்றார்கள். இந்த இரு கட்சிகளிடமிருந்தும், திரிபுவாதம், சீர்திருத்தவாதம், பலரகமான ட்ரொட்ஸ்கியவாதம் ஆகியவற்றிடமிருந்து இந்நாட்டில் உள்ள புரட்சிகர புத்திஜீவிகள் தம்மைத் துண்டித்துக்கொள்ளவேண்டும்.

அதேவேளையில், சமசமாஜ கட்சியும், கெனமன் திரிபுவாதக் கும்பலும் செய்த துரோகத்தைப் பயன்படுத்த முயற்சிக்கின்ற ஒருசில சூரர்கள் பற்றியும் நாம் கவனமாக இருத்தல் வேண்டும். இக் கும்பல் எதிர்ப் புரட்சிகர தத்துவத்தைப் பரப்புகின்றது. சேகுவேரா இயக்கம் என அழைக்கப்படுகின்ற ஜனதா விமுக்தி பெரமுன பற்றியே இங்கு நாம் குறிப்பிடுகின்றோம். வாலிபர்கள் மத்தியில் இருக்கின்ற புரட்சிகர அபிலாஷையை இக் கும்பல் பயன்படுத்தியதோடு, சிங்களத்தில் போதிய அளவு புரட்சிகர நூல்கள் இல்லாத நிலைமையையும் பயன்படுத்தி படுமோசமான வகுப்புவாதத்தை புரட்சிகர வார்த்தை ஜாலங்களால் மறைத்து மார்க்சிஸம்—லெனினிஸமாக ஊட்ட முனைகிறது. இக் கும்பல் சிறு வெற்றியை ஈட்டியுள்ளதோடு, வாலிபர்கள் மத்தியில் சிறிதளவு குழப்பத்தையும் உண்டாக்கியுள்ளது. ஆயினும் இக் கும்பலின் சுயரூபம் நாளுக்கு நாள் அம்பலப்பட்டு வருகிறது. இவர்கள் பரப்புகின்ற எதிர்ப் புரட்சிகர தத்துவத்தினாலும், அவர்களுக்கு பிற்போக்கு சக்திகளிடமிருந்து கிடைக்கின்ற ஆதரவினாலும் இக் கும்பல் அம்பலப்பட்டு வருகிறது.

## ஒட்டுமில்லை உறவுமில்லை

வகுப்புவாதத்திற்கும், மார்க்சிஸம்—லெனினிஸத்திற்கும் எதுவித ஒட்டுமில்லை உறவுமில்லை என்பதை புரட்சிகர புத்திஜீவிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். இவை இரண்டும் இரு துருவங்கள். சேகுவேரா கும்பல் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக நடத்துகின்ற குரூரமான வகுப்புவாதப் பிரச்சாரம் புரட்சிவாதிகளையும், தொழிலாளி வர்க்கத்தையும் பிளவுபடுத்தி எதிரிக்கு ஆதரவு அளிக்கிறது என்பதை புத்திஜீவிகள் புரிந்துகொள்ள வேண்டும். இது, தண்பனை எதிரியாக்கி, எமது எதிரிக்கு ஆதரவளிக்கும் முயற்சியாகும். இது எதிர்ப் புரட்சிகரப் பாதையாகும்.

இவர்கள் கூறுகின்ற உடனடிப் புரட்சி, இச் சகாப்தத்தின் மார்க்சிஸம்—லெனினிஸ புரட்சிகர தத்துவமான மாசேதுங் சிந்தனைக்கு முற்றிலும் விரோதமானது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். கிராமப் புறங்களுக்குச் சென்று, கிராமப்புற மக்கள் மத்தியில் அமைதியாக வேலை செய்து, அவர்களைத் தட்டி எழுப்பி, ஸ்தாபனமயப்படுத்தி, புரட்சிகரப் பாசறைகளை அமைத்து, மக்கள் சேனை ஒன்றை கட்டி எழுப்பி, நீண்ட நாள் மக்கள் யுத்தத்தை நடத்தி, இறுதியாக கிராமங்கள் மூலம் நகரங்களைச் சுற்றிவளைத்து முழுநாட்டையும் விடுதலை செய்ய வேண்டும் என மாசேதுங் சிந்தனை போதிக்கிறது. இதுவே மக்கள் யுத்த தத்துவமாகும். மிகவும் முன்னேறிய இன்றைய புரட்சிகர தத்துவமாகும். இத் தத்துவத்தினால் நாம் வழிகாட்டப்படாவிட்டால் நாசமாவதை தவிர்க்க முடியாது.

## சேகுவேரா கும்பல்

சேகுவேரா கும்பல் தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் பாத்திரத்தையும் நிராகரிக்கின்றது. அத்துடன் இப் பாத்திரத்தை வேறு வர்க்கங்களுக்கு அளிக்கவும் அது முயற்சிக்கின்றது. இதுவும் ஒரு நாசப் பாதையே. இது அழிவுக்கு இட்டுச் செல்லும், சமரசத்திற்கும் வழி வகுக்கும்

8-ம் பக்கம் பார்க்க

# கலைஞானங்கள் பற்றிய கண்ணோட்டம்

**வர்க்க சமுதாயத்தில் உள்ள அனைத்தும் குறிப்பிட்ட வர்க்கங்களுக்கு சொந்தமானவை; குறிப்பிட்ட வர்க்கங்களுக்கு சேவை செய்பவை. இன்றைய உலகில் ஒவ்வொன்றும் அரசியல், பொருளாதாரம் போன்றவை எல்லாம், ஒன்றில் ஆளும் வர்க்கங்களுக்கு உரியவை, அல்லது ஆளப்படும் வர்க்கங்களுக்கு உரியவை. ஒன்றில் சுரண்டும் வர்க்கங்களுக்கு சொந்தமானவை, அல்லது சுரண்டப்படும் வர்க்கங்களுக்கு சொந்தமானவை. அடிப்படையில் முதலாளி வர்க்கத்துக்கு சேவை செய்பவை, அல்லது பாட்டாளி வர்க்கத்துக்கு சேவை செய்பவை. கலை, விஞ்ஞானங்கள் கூட இதற்கு விதி விலக்கல்ல.**

அரசியல், பொருளாதாரம், சட்டம், இலக்கியம், வரலாறு முதலிய துறைகள் அவற்றைச் சுவீகரித்துள்ள வர்க்கங்களுக்கு உரியவையாகவும், சேவை செய்பவையாகவும் உள்ளதை இன்று பலர் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால் மருத்துவம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் போன்ற சில கலைகள் வர்க்கங்களின் எல்லைகளைக் கடந்து, சமுதாயம் முழுமைக்கும் தொண்டு செய்பவை, அவை மனிதகுலத்தின் பொதுச் சொத்து என்று அவர்களில் சிலர் வாதாடுகின்றனர். அமெரிக்காவின் அண்டவெளி ஆராய்ச்சிகளும் அம்புலிப் பயணங்களும் மனிதகுல வெற்றியின் சிகர சாதனைகள் என்று உச்சிமேல் வைத்து மெச்சிப் புகழ்கின்றனர், சோவியத் சமூக ஏகாதிபத்தியவாதிகளின் தொழில்நுட்ப முன்னேற்றங்கலும் விஞ்ஞான மேம்பாடுகலும் மக்கள் அனைவருக்கும் சொந்தமானவை என்று துதி பாடுகின்றனர். இது உண்மையா?

மேலை நாடுகளில் கண்டு பிடிக்கப்பட்ட நீராவி யந்திரங்களும், மின் சக்தி ஆற்றலும் விஞ்ஞானத் துறையின் வளர்ச்சிகள்தான். ஆனால் அவை முதலாளிகள் கைகளில் தொழிலாளர்களைச் சுரண்டும் சாதனங்களாக பயன்படுத்தப்படவில்லையா? உலகின் பௌதிக, ரசாயனக் கலைகளின் கண்டு பிடிப்புகள் அயல் நாடுகளை ஆக்கிரமிப்பவர்களுக்கு அழிவுக் கருவிகளாக சேவை செய்யவில்லையா? உலகின் முன்னேறிய தொழில்நுட்ப, விஞ்ஞானத் திறன்களை பிரயோகித்துச் சிருஷ்டித்த அணு ஆற்றலும், ஆயுத சாதனங்களும், கிருமி நாசினிகளும் அமரிக்கப் போர் வெறியர்களால் தமது ஆக்கிரமிப்பு யுத்தங்களை விஸ்தரிப்பதற்கும், மக்களை வதை செய்வதற்கும் உபயோகிக்கப்படவில்லையா? அது போல, உலக முதலாளித்துவ ஏகபோகக் கும்பல்கள் உழைப்பாளி மக்களைக் கொள்ளையடித்து பறித்த செல்வங்களை விரையம் செய்து நடத்தும் றொக்கட் ஏவுகணைப் பரிசோதனைகளும் அண்டவெளி, அம்புலிப் பயணங்களும் அவர்களுடைய பணம் பிடுங்கும் நப்பாசைகளைப் பூர்த்திசெய்யும் சாதனங்களாகச் சேவை செய்யும் என்பதில் சந்தேகமே இல்லை.

இவ்வாறு வர்க்கக் கண்ணோட்டத்தை வழிகாட்டியாகக் கொண்டு சகல விஷயங்களையும் நிகழ்ச்சிகளையும் பரிசீலனை செய்யவேண்டும் என்று மகத்தான மாசே துங் சிந்தனை நமக்குப் போதிக்கின்றது,

விஞ்ஞானம் தொழில்நுட்பமாயிருந்தாலும் சரி, மருத்துவம் (சிறப்பாக சத்திர சிகிச்சையும், இருதய மாற்றுக் கலையும்) போன்ற கலைகளாயிருந்தாலும் சரி, எந்த வர்க்கங்கள் அவற்றை சுவீகரித்திருக்கின்றன, எந்த வர்க்கங்களுக்கு எதிராக அவை உபயோகிக்கப்படுகின்றன என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். பார்த்து, சுரண்டும் ஆளும் வர்க்கங்கள் தமது சொந்த வாழ்வின் அடிவானங்களை விரிவாக்குவதற்கும், மூக்கி முனைக் குற்றுயிர் குறைவுயிரோடிருக்கும் சுரண்டல் அமைப்பைப் பாதுகாப்பதற்கும் பயன்படுத்தும் கலைவிஞ்ஞான ஆராய்ச்சிகளையும் விளைவுகளையும் நாம் எப்பொழுதும் எதிர்க்க வேண்டும். மக்களின் கலைஞானங்களை, மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்கும் அதைப் பாதுகாப்பதற்கும் சேவை செய்யும் விஞ்ஞான, தொழில் நுட்ப சாதனைகளை நாம் பாடி ஆடி வரவேற்க வேண்டும்.

இதுவே விஞ்ஞானம் தொழில்நுட்பம், மருத்துவம் போன்றவை பற்றிய நமது மார்க்சிஸம்-லெனினிஸம்-மாஓ சேதுங் சிந்தனைக் கண்ணோட்டமாகும்.

# துரியோதனன் ஓடியிருப்பான்

## இந்தப் பாஞ்சாலியைக் கண்டிருந்தால்

**செங்கொடிச் சங்கத்தைச் சேர்ந்த ஒரு பெண் தொழிலாளியான பாஞ்சாலி என்பரை கண்டுகதைத்த தோட்ட தொழிலாளி ''செந்தி'' தனது அனுபவத்தை இங்கு கூறுகிறார். ஆர்.**

பஞ்ச பாண்டவர் கதையின் பாஞ்சாலியைக் கண்டு துரியோதனன் பயந்தானோ என்னவோ, எனக்குத் தெரியாது. ஆனூர் நான் கண்டு கதைத்த பாஞ்சாலியை துரியோதனன் கண்டிருந்தால் நிச்சயமாக அவன் நாடும் வேண்டாம், நகரும் வேண்டாம் என்று காட்டுக்கு ஓடிப் போயிருப்பான். இந்த பாஞ்சாலி வேறு யாருமல்ல, நமது சங்க அங்கத்தவர் ஒருவர் தான். இவரை காணவும், கதைக்கவும் கிடைத்தது என் பெரும் பாக்கியமாகவே கருதுகிறேன்.

ஐம்பத்தைந்து வயதை தாண்டிய இவர், தனக்குக் கிடைக்கும் பென்ஷன் மூலமும், தான் அறிந்த கைவைத்தியத்தை கொண்டும் காலத்தை ஓட்டுகிறூர். இவர் பேசும் போது கனல் பறக்கிறது. அந்த கனலில் மாஓ தத்துவங்கள் புகுந்து விளையாடுகின்றன. இவர் இருப்பிடத்தை குறிப்பிட விரும்பவில்லை.

''மார்க்சிஸத்தை ஒருவர் உண்மையில் கிரகித்து கொள்ள வேண்டுமானுல் அவர் அதை நூல்களிலிருந்து மாத்திரமல்ல...... தொழிலாளர்-விவாசாயிகள் ஆகியோருடன் நெருங்கிய தொடர்புகள் மூலமும் படிக்க வேண்டும்'' என்ற மாஓவின் மேற்கோளுக்கு ஓர் ஓர் உதாரணமாக திகழுகிறூர் இவர். இவருடன் கதைத்த சிறிது நேரத்தின் பின்புபட்டங்கள் பெறுவதிலும், கல்லூரியில் படிப்பதிலும் பார்க்கஅனுபவம் உடைய முன்னேறிய பாட்டாளி வர்க்கத்திடமிருந்து நாம் கற்க வேண்டியது அநேகம் உள்ளது என்பதை உணர்ந்தேன்.

''நாம் பிறந்தது எத்தனை நிச்சயமோ, நாம் இறப்போம் என்பதும் அத்தனை நிச்சயம், இப்படி, நிச்சயமாய் ஒன்று இருக்குமாயின் அதைக் கண்டு நாம் பயப்படலாமா?'' என்று இவர் தனக்கே உரிய மலையகத் தமிழில் பேசும் போது கேட்போர் உள்ளம் எழுச்சி பெறுகிறது.

நீஞுகலையில் தோழர் இருவர் ஏகாதிபத்திய, முதலாளி வர்க்கத்தின் காவல் நாய்களின் துப்பாக்கி சூட்டிற்கு பலியாகிவிட்டார்கள் என்ற செய்தி கேட்டதும், இவர் இருக்கும் தோட்டத்தின் இளைஞர்கள் அவசர, அவசரமாக ஓட்டமும் நடையுமாக பதுளை வந்து சேர்ந்தார்களாம். பலியான தம் வர்க்கத் தோழர்களை காண, அந்த இளைஞர்களுடன் ஈடு கொடுத்து இந்த அம்மையாரும் வந்திருக்கிறூர்.

ஆஸ்பத்திரியில் வைத்திருந்த இவருக்கு பிரதேசங்களை பார்க்க அனுமதிமறுக்கப்பட்டது. வெளியே நின்றுக்கொண்டிருந்தார். அங்கே தன் மகளை பறி கொடுத்த ஒரு தோழரின் தாய் அழுத வண்ணம் இருப்பதை கண்டார் அவரிடம் போய் ''அம்மா, உன் மகன் போய் விட்டான் என்றுதானே அழுகிறூய்? அழாதே, எனக்கும் நான்கு புதல்வர்கள் இருக்கிறூகள். அவர்களும் இதே போல சாவதையே நான் விரும்புவேன். உன் புதல்வன் தொழிலாளருக்காக இறந்தான். அதைவிட ஒரு தாய்க்கு தன் மகனை நினைத்து பெருமைப்பட வேறு எதுவுமே இருக்க முடியாது'' என்று வீர உணர்வோடு ஆறுதல் கூறினூர்.

அதன் பின்பு அங்கு வந்திருந்த அரசாங்க சார்புடைய தொழிற் சங்கவாதிகளைப் பார்த்து ''என்ன ஐயா, தொழிலாளிகளின் அரசாங்கம். தொழிலாளர் அரசாங்கம் என்றீர்களே. இது தானே தொழிலாளர் அரசாங்கம்? இல்லவே இல்லை, இது முதலாளிகளின் அரசாங்கம். இதனுல்தான் இப்படி அநியாயமாக இரு தொழிலாளரை சுட்டுத் தள்ளியது. இரு உயிர்களை பலிகொண்டு விட்டதால் நாங்கள் அடங்கி விடுவோம் என்று மட்டும் எண்ணுதீர்கள்...'' என்று உணர்ச்சி மயமாகி கூறியதை இந்த அம்மையாரின் தோட்டத்து இளைஞர்கள் கவனித்து விட்டு அனுவசியமாக ஏற்படக்கூடிய இக்கட்டான நிலையை தவிர்ப்பதற்காக இவரை அவ்விடத்திலிருந்து அழைத்துச் சென்றூர்கள்.

தோழர் அழகர்சாமியின் பிணமான உடலை மயானத்தில் வைத்து தான் கண்டதை பற்றி பெருமையுடன் கூறுகிறூர். அதனை இவர் பெரும் பாக்கியமாக கருதுகிறூர்.

சுட்டவனைப் பற்றி அழகாக கூறினூர். அதைக்கேட்க அவன் அருகில் இல்லையே என்ற எண்ணமே நமக்கு ஏற்படுகிறது அவர் கூறியதாவது; ''அவனும் ஒரு தாய் வயிற்றில் இருந்துதானு பிறந்தான்? பெற்ற வயிறு பித்தாகி பரிதவிக்க விட்டானே, இவனும் ஒரு தாய்க்கு மகன் தானு?''

பாட்டியார் தம் பேத்திகளுக்கு பேசப் பழக்கும்வயதில் கடவுள் பெயரையும், தேவாரமும் கற்றுக்கொடுப்பது வழக்கம். ஆனுல் இந்த வீர பாட்டியோ தம் பேத்திமாருக்கு கற்று கொடுக்கும் சுலோகங்கள் ''எமது பாதை—புரட்சி பாதை, ஆறுநாள் வேலை கொடு'' என்பனவாகும் ''என் பேத்தி மணிமேகலை இது கூறும்போது என் உள்ளம் பெருமை கொள்ளும்'' என்று மன மகிழ்வோடு கூறுகிறூர். இவர்.

தன் புதல்வரை வாசிக்க கூறிவிட்டு இவர் மிகவும் விரும்பிக் கேட்பது மாஓ மேற்கோள்களையும், தொழிலாளி பத்திரிகையுமாகும். இவர் தொழிலாளருக்கு கூற விரும்புவது என்ன? அவரே கூறுகிறூர்: ''தொண்டமான் ஒரு முதலாளி, அசீஸ் ஒரு முதலாளி. எமது போராட்டமே முதலாளிகளுக்கு விரோதமாக இருக்கும் போது முதலாளிகள் எப்படி நமது பிரச்சினைகளை தீர்க்க முடியும்? இதை உணர்ந்து நமக்காகப் பாடுபடும் இயக்கங்களில் சேர்ந்து உழைக்க வேண்டும்.''

பாட்டாளி வர்க்கத்தின் முன்னேறிய பகுதினரே எமது இயக்கத்தின்காவலராய் நின்று அதைக் கட்டிக்காத்து வளர்க்க வேண்டும். இதற்கு உற்ற துணையாய். நிற்க பாஞ்சாலி போன்ற பலர் தேவை. அப்போதுதான் ஏகாதிபத்தியத்திற்கும். அதன் அடிவருடும் முதலாளித்துவத்திற்கும் எதிராக நாம் அணி திரண்டு, வெல்லலாம்.

**என். எஸ். இருஷ்ணனின் 'அந்தக்காலம்' என்ற பாட்டைத் தழுவிய நடையில் எழுதப்பட்டது.**

# அந்தக்காலமும் இந்தக்காலமும்

மனுஷனை என். எம். ஏச்சுப் பிழைச்சது அந்தக்காலம்
— அது அந்தக்காலம்
மடமை நீங்கி யறிவுடமை யானது இந்தக்காலம்

கௌமனை நம்பிக் கெட்டழிவுற்றது அந்தக்காலம்
— அது அந்தக்காலம்
கேள்விகள் கேட்டு பகுத்தறிவுற்றது இந்தக்காலம்

ஜனதா ஆண்டுவ என்றுமயங்கினது அந்தக் காலம்
— அது அந்தக்காலம்
செங்கொடி சங்கம் எங்கள் இயக்கம் இந்தக்காலம்

மாயத்தலைவர்கள் அந்தக்காலம்
மாசே துங் தலைவர் இந்தக்காலம்
மாடியில் தலைவர் அந்தக்காலம்
மக்களுள் தலைவர் இந்தக்காலம்

பார்லிமெண் டேறி ஒடிஒழிஞ் சது அந்தக்காலம்
— அது அந்தக்காலம்
பூர்ஷுவா வர்க்கப் பொய்யை உணர்ந்தது இந்தக்காலம்

சாதி ஒழிக்கச் சமரசம் பேசின தந்தக் காலம்
— அது அந்தக்காலம்
சாதி ஒழிக்கச் செங்கொடி ஏந்துவது அந்தக்காலம்

இன்முறை பேசிக் காரியங் கெட்டது அந்தக்காலம்
— அது அந்தக்காலம்
வன்முறையின்றி வழியிலைத் தம்பி இந்தக்காலம்

வோட்டுப் போடுவது அந்தக்காலம்
வேட்டுப் போடுவது இந்தக்காலம்
கையை நீட்டுவது அந்தக்காலம்
கத்தியை தீட்டுவது இந்தக்காலம்

நம்மைச் சுற்றி — நவம்

# 'எனக்கல்லடி உபதேசம், ஊருக்கடி'

சிக்கனமாயிருங்கள்; தியாகம் செய்யுங்கள் இவை தான் இன்று கூட்டணி அரசாங்கமும் அதன் பிரச்சார யந்திரங்களும் மக்களுக்குத் திரும்பத் திரும்பக் கூறும் போதனைகள்—இவை யு. என். பி. ஆட்சிக் காலத்திலும் கேட்டுச் சலித்துப் போன போதனைகள். எதிர்கால சுபீட்சத்திற்காக தற்காலத்தில் சிக்கனமாயிருப்பதும், தியாகம் செய்வதும் அவசியம்தான். சிக்கனமும், தியாகமும் செய்வதால் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், உழைக்கும் மக்களுக்கும் அதனால் நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கையிருந்தால் அவர்கள் கட்டாயம் சிக்கனத்தையும், தியாகத்தையும் செய்வார்கள்.

உதாரணமாக, சிக்கனத்தையும், தியாகத்தையும் செய்து, சுய சக்தியில் நம்பிக்கை வைத்து இன்று சீன மக்கள் சகல துறைகளிலும் முன்னேறி முன்னணியில் நிற்கிறார்கள். ஏனெனில், இன்று சீனாவில் நடப்பது பாட்டாளி வர்க்கத்தின் சோஷலிஸ ஆட்சி. அதாவது, சீனாவின் சமூக, பொருளாதார வளர்ச்சி உழைக்கும் மக்களின் நலன்களுக்காகவே பயன்படுத்தப் படுகிறது.

ஆனால், சிக்கனத்தையும், தியாகத்தையும் உழைக்கும் மக்களுக்குப் போதனை செய்யும் முக்கூட்டணி ஆட்சி, இலங்கையின் பொருளாதாரத்தில் ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சக்திகளின் பிடிப்பை பூரணமாகத் தகர்த்தெறிய விரும்பாத ஆட்சியாகும். எனவே, சிக்கனமும், தியாகமும் உழைக்கும் மக்களுக்கு எத்தகைய பயனும் தரப் போவதில்லை. இன்று இந்நாட்டு உழைக்கும் மக்கள் உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவினங்களுக்கு ஈடுகொடுக்க முடியாத குறைந்த வருமானத்தில் கால்வயிற்றுக்கும், அரைவயிற்றுக்கும் உண்டு சிக்கனமாகவும், அல்லது பட்டினி கிடந்தும் தியாகம் செய்ய வேண்டியுள்ளது. இந்த நிலையில் முக்கூட்டணி அரசாங்கம் உழைக்கும் மக்களிடம் சிக்கனத்தையும், தியாகத்தையும் பேசுவது முழு பூசணிக்காயை சோற்றில் மறைத்த கதை போன்றதாகும்.

அதே வேளையில், புதுவித்தைகளை காட்டி மக்களின் எண்ணங்களை தற்காலிகமாக திசை திருப்பும் மாயாஜாலங்களை என். எம். பெரேரா செய்த போதிலும், ஏகாதிபத்திய வாதிகளுக்கு நம்பிக்கை தரும் நல்லபிள்ளையாகவே வரவு—செலவு திட்டத்தை சமர்ப்பித்துள்ளார்.

1956ல் பண்டாரநாயக்கா கூறியதுபோன்று, அந்நியரின் தோட்டங்களையும், வங்கிகளையும் கைப்பற்றாவிட்டாலும், 1964, வரவு—செலவு திட்டத்தில் குறிப்பிட்டது போன்று வெளிநாட்டுக்குச் செல்லும் லாபங்களையும், அந்நிய வங்கிகளில் புதிய கணக்குகள் வைப்பதையும் தடுக்கவாவது முயற்சி எடுக்கப்படவில்லை.

சில மாதங்களுக்கு முன் பெரிய நோட்டுக்களை மாற்ற வருவோரின் பெயர்களைக் குறித்துவைக்குமாறு இலங்கை வங்கிக்கும், மக்கள் வங்கிக்கும் அனுப்பப்பட்ட சுற்றறிக்கை அந்நிய வங்கிகளுக்கு அனுப்பப்படாமல் விடப்பட்டது தற்செயலானதல்ல. அந்நியருக்கு சொந்தமான தோட்டங்களும், வங்கிகளும் சொத்து வரியிலிருந்து தப்பிவிட்டன. உண்மையில் ட்ரொட்ஸ்கிய வாதிகள் சோஷலிஸத்தின் விரோதிகள் மட்டுமல்ல, அவர்கள் தேசிய விடுதலை இயக்கத்தினதும் விரோதிகள். எனவேதான் என். எம். பெரேராவின் தங்கமூளை ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களில் கைவைக்கவில்லை. என். எம். வெளிநாடு சென்று உலக வங்கிக்குத் துதிபாடியதும், அவர்களை இங்கு வரவழைத்து விருந்துபசாரம் செய்வதும் ஆச்சரியப்படக் கூடியதல்ல.

சிக்கனத்தையும், தியாகத்தையும் போதிக்கும் முக்கூட்டணி அரசாங்கத்தின் அமைச்சர்கள், நிர்வாகிகள், உயர் அதிகாரிகள், பாராளுமன்ற அங்கத்தவர்கள் எத்தகைய சிக்கனத்தையும், தியாகத்தையும் கடைப்பிடிக்கிறார்கள்? ''படிப்பது ராமாயணம், இடிப்பது பெருமாள் கோயில்'' என்பதுபோல அமைச்சர்கள் சொகுசான கார்களில் பவனி வருகின்றனர்; தமது காரியாலய அறைகளில் நவீன குளிர் சாதன அமைப்புகளை அமைக்கின்றனர்; ஊதாரிச் செலவுகளை செய்கின்றனர்; பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு புதிய கார்கள் கொடுக்க யோசிக்கின்றனர். எதிர்க் கட்சித் தலைவருக்கு உத்தியோகப்பூர்வமான கார் கொடுக்க ஆலோசிக்கின்றனர்; பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு மேலும் அலவன்ஸுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அண்மையில் முக்கிய அமைச்சரின் அழகிய அந்தரங்க காரியதரிசி விரும்பிய அரசாங்கக் காரொன்றின் அடையாளம் அழிக்கப்பட்டுள்ளது. இந்த லட்சணத்தில்தான் சிக்கனமும் தியாகமும் உழைக்கும் மக்களிடம் கூறப்படுகிறது.

★

புரட்சி இந்நாட்டில் சரி வராது என்று படுகேவலமாகப் பேசித் திரிந்த அமைச்சர் பலர், இன்று ''இந்த அரசாங்கம் புரட்சியின் மூலம் வராதபடியால், நாம் விரும்பியவற்றையெல்லாம் செய்ய முடியவில்லை'' எனக் கூறுகின்றனர். இவர்கள் திடீர் புரட்சிவாதிகளாகிவிட்டனர். இதே பாட்டைத்தான் தனது வரவு—செலவு திட்டப் பேச்சில் என். எம். பெரேராவும் பாடியுள்ளார். (குமாரசூரியரும், சுபசிங்காவும் இப்பாட்

தேவையான பயிற்சி இலங்கையிலேயே அளிக்கப்படும் என்றும் கூறப்பட்டிருந்தது. இது ஆயுதப் படைகளின் தன்மையை மாற்றாதென்றாலும் தொடர்பால் ஏற்படும் ஏகாதிபத்திய சார்புத் தன்மையை ஓரளவு குறைத்திருக்கும்.

அமைச்சர் இலங்கரத்தின ஆயுதப் படைகளின் பெயர்களை ஸ்ரீலங்கா சுதந்திர

வர்க்கத்துக்கு எதிராக போர்க் கொடி உயர்த்தும் இந்திய பாட்டாளிகளையும், உழைக்கும் மக்களையும், அவர்களுக்கு சரியான புரட்சிகரத் தலைமை தரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ) யையும் மிகக் கொடுமையாக அடக்குங்கள். என இந்திய அரசை நோக்கி ஊளையிடுகிறார்.

ஏகாதிபத்திய சார்பு, நிலப்பிரபுத்துவ, பெரும் முதலாளித்துவ சக்திகளுக்கு இலங்

## ஏமாற்றுக் கும்பலின் புதிய பாட்டு

டில் நன்கு தேர்ச்சியுள்ளவர்கள்) புரட்சி நடக்கவில்லையே என்று சாட்டுக் கூறுவதோடு சரி. ஆனால், புரட்சியின் அவசியத்தைப் பற்றி ஒரு வார்த்தையேனும் கூறுவதில்லை. ஏமாற்றுக் கும்பலுக்கு புரட்சியும், பாராளுமன்றமும் ஒன்று தானே!

ஆனால், முதலாளிகள் புரட்சியைப் பற்றியும், சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு—செலவு

பொலிஸ், ஸ்ரீலங்கா சுதந்திர ராணுவம், ஸ்ரீலங்கா சுதந்திர கடற்படை என மாற்றவேண்டும் என்று ''நேசன்'' பத்திரிகையில் எழுதிக்கொண்டிருக்கும் அதேவேளையில், முக்கிய ஆயுதப்படைகளுக்கான பயிற்சி தொடர்ந்து இங்கிலாந்திலேயே அளிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப் பட்டுள்ளது. அதாவது, ஆயுதப் படைகளின் ஏகாதிபத்தி

கையில் கூலியாக பணிபுரியும் வாஸு, இலங்கை பாட்டாளி வர்க்கத்துக்கும், உழைக்கும் மக்களுக்கும் எதிராக விஷம் கக்குவது ரகசியமானதல்ல.

கடந்த பொதுத் தேர்தலின் போது யு. என். பிக்கும் சகல பிற்போக்கு சக்திகளுக்கும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து செக்குமாடுபோல் வீரகேசரியில் பிரச்சாரம் செய்த வாஸு, தேர்தல் முடிந்ததும் பல்டி அடித்து ஒணான் வாஸுவாக மாறியது, இலங்கை மண்

## ஆள் மாறினர் அரசு இயந்திரம் மாறவில்லை

திட்டத்தைப் பற்றியும் என்ன எண்ணுகிறார்கள் என்பது அர்த்த புஷ்டியுள்ளது.

இம்மாதம் 4ந் திகதி தேயிலை பிரச்சார சபையில் கைத்தொழில், வர்த்தகத்துறை முதலாளிமார் சம்மேளனங்கள் வரவு—செலவு திட்டம் பற்றிய கூட்டம் நடத்தின. தலைமை வகித்த ஆர். ஈ. ஜயதிலக்கா இந்திரா காந்தியை மேற்கோள் காட்டி கூறியதாவது: ''மிகப் பெரும் சொத்துடைமையுள்ளவர்கள் சொத்தில்

யச் சார்புத் தன்மை எள்ளளவேனும் குறையக்கூடாதென்பதே கூட்டணி அரசாங்கத்தின் எண்ணம்.

பாராளுமன்ற ஆசனங்களில் ஆட்கள் மாறியபோதிலும், அரசு யந்திரம் மாறவில்லை என்பதற்கு இது ஓர் நல்ல எடுத்துக்காட்டு.

★

இந்திய பிற்போக்கு அரசுக்கு எதிராக இந்திய பாட்டாளி வர்க்கமும், உழைக்கும்

ணில் தனது தேவைகளைத் தொடர்ந்தும் பூர்த்திசெய்து கொள்ளும் நப்பாசை என்பது தெரிந்ததே.

சுரண்டும் வர்க்கங்களின் நிரந்தரக் கைக்கூலியான வாஸு, இலங்கையில் உழைக்கும் மக்களின் எதிரியாக இருப்பது போலவே, இந்திய உழைக்கும் மக்களின் பரம எதிரியாகத் திகழ்கிறார். இக் கைக்கூலிகளின் கூப்பாடுகள் ஒன்றும் சுரண்டும் வர்க்கங்களின் இந்திய அரசை பாதுகாக்க முடியாது. இந்திய பாட்டாளி வர்க்கமும்,

## வீரகேசரி ஆசிரியரின் சன்னிப் பிதற்றல்

லாதவர்களுக்கு ஒரு பகுதியையேனும் தாங்களாக முன்வந்து கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் உங்கள் முழுச் சொத்துக்களும் பலாத்காரமாகப் பறித்தெடுக்கப்படும் காலம் விரைவில் வரும். இந்நிலைமையைத் தவிர்ப்பதற்கு நாம் அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டும்.'' இவரின் இக்கூற்று முக்கூட்டணி அரசாங்கத்தையும், அதன் வரவு—செலவு திட்டத்தையும், அவர்கள் பேசும் புரட்சியைப்பற்றியும் அம்பலப்படுத்துகிறது.

★

அரசு யந்திரம் யார் கையிலுள்ளது என்பதே யார் கையில் ஆட்சியுள்ளது என்பதற்கான முக்கிய கணிப்பீடு. இதை முழுக்க மறுக்க முடியாததினால் போலும், முக்கூட்டணியின் தேர்தல் அறிக்கையில் ஆயுதப்படைகளை மாற்றியமைக்கப் போவதாகவும், ஆயுதப் படைகளுக்குத்

மக்களும் கொடுக்கும் ஒவ்வொரு அடியும், வீரகேசரி ஆசிரியர் வாஸுவின் இதயத்தில் மரண அடியாக விழுகிறது. அவரது தாயக பாசம் வர்க்க பாசமாக மாறி கண்கள் பிதுங்குகிறது; கூலிக்கு மாரடிக்கும் பேனா விஷவாந்தியெடுக்க ஆரம்பித்துவிடுகிறது.

வாஸுவின் தாயகத்திலுள்ள இந்திய சுரண்டும்

உழைக்கும் மக்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ) யின் தலைமையின்கீழ், மாசேதுங் சிந்தனையில் ஆயுதபாணிகளாகி, இந்திய சுரண்டும் வர்க்கங்களுக்கு மரண அடி கொடுக்க எழுந்துவிட்டார்கள். அவர்கள், கொடுக்கும்' ஒவ்வொரு அடியும் அவர்களுடைய வீச்சும் வாஸுவை திகில் கொள்ளச் செய்து சன்னிப் பிதற்றல் போடுவதைத் தவிர்க்க இயலாது.

## மக்கள் சீனத்துக்கும், கனடாவுக்கும் இடையில் ராஜதந்திர தொடர்பு

மக்கள் சீனக் குடியரசும், கனேடிய அரசாங்கமும் ஒன்றை ஒன்று அங்கீகரித்து ராஜதந்திர தொடர்புகளை ஸ்தாபிக்க தீர்மானித்துள்ளன. இந்த ராஜதந்திர உறவு இரு நாடுகளின் சுயாதிபத்தியத்தையும், எல்லைகளையும் அங்கீகரிப்பதோடு, ஒருவரது உள்நாட்டு விவகாரத்தில் மற்றவர் தலையிடாமை, சமநிலையில் பரஸ்பர தொடர்பு ஆகிய கோட்பாடுகளை உள்ளடக்கிய பஞ்சசீலத்தின் அடிப்படையில் ஸ்தாபிக்கப்படுகிறது.

சீன மக்களினதும், கனேடிய மக்களினதும் நட்புறவு பழமையானது. ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தில் சீன மக்கள் ஈடுபட்டிருந்தபோது, சீன மக்களின் தலைசிறந்த நண்பரான கனேடிய டாக்டர் நோர்மன் பெத்யூன் சீன புரட்சியின் வெற்றிக்காக தனது இன்னுயிரை தியாகம் செய்தார். அண்மைக் காலத்தில் இந்த இரு நாடுகளுக்குமிடையில் தொடர்புகள் அபிவிருத்தியடைந்து ராஜதந்திர உறவை ஏற்படுத்துகின்றன.

### கொழும்பு முனிஸிபல்

# யு. என். பி. நிர்வாகத்தின் மக்கள் விரோதச் செயல்கள்

அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் வோட்டுப் பொறுக்குவதற்காக எத்தனையோ தந்திரங்களைக் கையாள்வது தெரிந்ததே. அவற்றில் ஒன்றுதான் வேலையின்றி வாடிக்கிடப்போருக்கு வேலை எடுத்துக் கொடுக்கும் விஷயமும். அதிலும் திடீர்வேலை எடுத்துக் கொடுத்து, தற்காலிக தொழிலாளர்களாக (காஷுவல் லேபர்ஸ்) அமர்த்திவிட்டு, தேர்தல் முடிந்ததும் அவர்களுக்குச் சீட்டுக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பிவைப்பதில் யு. என். பி. அரசியல் வாதிகளுக்கு நிகர் அவர்கள்தான். தேர்தலுக்காக எத்தனையோ வகைகளில் செலவாகிறது. அந்த வகையில், சிலமாதங்களுக்கு இத் தற்காலிகத்தொழிலாளர்களுக்குச் சம்பளமாகக் கொடுக்கப்படும் தொகையையும் சேர்த்துக் கொண்டால் என்ன கெட்டுவிடும் என்பதுதான் இவர்களின் நினைப்பு. ஆனால் இவர்களின் கேடுகெட்ட இந்த நினைப்புக்கு பொது மக்களின் வரிப்பணத்தில் கைவைப்பதுதான் இங்கு கவனிக்க வேண்டிய ஒரு முக்கிய விஷயம். உதாரணத்திற்கு 1969 ல் கொழும்பு முனிஸிபல் தேர்தல் காலங்களிலும், 1970ல் பாராளுமன்ற தேர்தலிலும் வோட்டுப் பொறுக்குவதற்காக யு. என். பி. யின் நிர்வாகத்திலுள்ள கொழும்பு முனிஸிபலில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுக்காக செலவான சம்பளத் தொகையை எடுத்துக்காட்டலாம்.

1969ல் முனிஸிபல் தேர்தலில், ஒக்டோபரில் நியமனப் பத்திரங்கள் தாக்கலானதிலிருந்து செலவான தொகை:-

ஒக்டோபர்: ரூ. 24,192/26
நவம்பர்: ரூ. 71,663/45
டிசம்பர்: ரூ. 269,639/43

பாராளுமன்றத் தேர்தலில் வோட்டுப் பொறுக்குவதற்காக:-

ஜனவரி: ரூ. 70,748/60
பெப்ரவரி: ரூ. 78,127/67
மார்ச்: ரூ. 82,454/60
ஏப்ரல்: ரூ. 8,150/-
மே: ரூ. 32,331/84

தற்காலிகத் தொழிலாளருக்கு தினம் ரூ. 5.40 சதம் சம்பளம் என்பதும், இவர்கள் அனைவரும் தேர்தல் முடிந்ததும் வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள் என்பதும் கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயம்.

வேலையில்லாதோருக்கு வேலை எடுத்துக் கொடுப்பதும், அவர்களுக்குச் செலவிடப்படும் சம்பளமும் ஆட்சேபனைக்குரியது என்று நாம் சொல்லவில்லை. வேலைக்கு அமர்த்தப்பட்டோரை நிரந்தரமாக வைத்திருந்தால் பரவாயில்லை. ஆனால், வோட்டுப் பெறுவதற்காக மட்டும் தற்காலிகமாக வேலைக்கு அமர்த்திவிட்டு, தேர்தல் முடிந்ததும் அவர்களை வெளியே தள்ளுவதும், இந்த தேர்தல் நோக்கத்திற்காகச் சம்பளம் என்ற பெயரில் செலவாகும் தொகை பொதுமக்கள் முனிஸிபலுக்கு வரியாகச் செலுத்திய பணத்திலிருந்து போவதுதான் படு அயோக்கியத்தனமான, கபடத்தனமான, அதர்மமான செயலாகும்.

பண விவகாரம் இருக்கட்டும்; வேலையில்லாதவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டதும், தமக்கு ஒரு விடிவுகாலம் வந்துவிட்டது என அவர்கள் நம்பி இருப்பர்; தமது சீவியத்திற்கு ஏதோ சிறிதளவாவது ஒரு வழிபிறந்திருக்கிறதே என்று மன ஆறுதல் அடைந்திருப்பர். இந்நிலையில் அவர்களை வேலையிலிருந்து நீக்குவது நம்பிக்கைத் துரோகமல்லவா? அவர்களின் வயிற்றில் அடிக்கும் கொடுமையல்லவா? ஆனால் பதவிக்காக வோட்டுவேட்டையாடும் அரசியல்வாதிகளுக்கும், யு. என். பி. நிர்வாகத்தில் உள்ள கொழும்பு முனிஸிபலுக்கும் இந்த நம்பிக்கைத் துரோகங்களும், அதர்மச் செயல்களும் தண்ணீர்பட்ட பாடு.

இது மட்டுமா?

கொழும்பு நகரத்தின் சேரிகளில் வசிப்போருக்கு மலசல கூட வசதிகள் குறைவு. ஆதலால் அவர்கள் பொது மலசல கூடங்களைத்தான் அதிகமாகப் பாவிக்கிறார்கள். இந்த மலசல கூடங்களை நகர சுத்தித்தொழிலாளர்கள் சுத்தம் செய்வதற்கு அவர்களுக்கு ஓவர்டைம் கொடுக்க முடியாது என்று முனிஸிபல் சொல்லிவிட்டது. இதனால் பொது மலசல கூடங்கள் சுத்தப்படுத்துவது குறைந்து விட்டது. நகர சுத்தித் தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளமோ மிகக் குறைவு. ஓவர்டைம் செய்தால் மணித்தியாலம் ஐம்பது சதம். இந்த தொழிலாளருக்கு ஓவர்டைம் காசாக ஐம்பது சதம் ஒரு ரூபா கொடுப்பதில் முனிஸிபல் நிர்வாகத்திற்கு அப்படி ஒன்றும் குடிமுழுகிப் போகாது. மலசல கூடங்களும் துப்பரவாக இருக்கும் மக்களின் சுகாதாரமும் ஓரளவு பாதுகாக்கப்படும். ஆனால், யு. என். பி.யின் நிர்வாகத்தில் உள்ள முனிஸிபலுக்கு இதெல்லாம் அக்கறையான விஷயமல்ல.

இதுபோக, முனிஸிபலுக்குச் சொந்தமான குடியிருப்பு வீடுகளை எடுத்துக்கொண்டால் சொல்லத் தேவையில்லை. அவ்வீடுகள் பழுதுபார்க்கப்படுவதில்லை; வெள்ளையடிக்கப்படுவதில்லை. மழை வந்தால் வெள்ளம். வடிகால்வாய்களோ படுமோசம்.

தற்காலிகத் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்வதற்கும், நகர சுத்தித் தொழிலாளர்களின் ஓவர்டைம் சம்பளத்தை நிறுத்தியதற்கும், முனிஸிபல் வீடுகளை பழுது பார்க்காமல் இருப்பதற்கும், வீதிகளையும், வடிகால்வாய்களையும் சரிவரப் பராமரிக்காமல் இருப்பதற்கும் முனிஸிபல் சொல்லும் ஒரே பல்லவி காசு இல்லை, நிதிநெருக்கடி என்பதுதான். ஆனால், இந்த யு. என். பி. முனிஸிபல் நிர்வாகத்தில் நிலவும் எத்தனையோ ஊழல்களால் பெருமளவு பணம் விரயமாவதை மறைத்து விடுகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றை எடுத்துக்கொள்வோம். முனிஸிபலில் வேலை செய்யும் ஊழியர்கள், தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் இடையில் ஏற்படும் தகராறுகளுக்குச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக சம்பளத்துடன் வழக்கறிஞர் குழு ஒன்றை வைத்திருக்கிறது. ஆனால், வழக்குகள் இவர்களால் பெரும்பாலும் நடத்தப்படுவதில்லை. மாறாக, வெளியே உள்ள பிரபல வழக்கறிஞர்களைக் கொண்டு — அவர்களுக்கு ஒரு தவணைக்கு நானூறு, ஐந்நூறு ரூபாய் என அள்ளிக் கொடுத்து வழக்கு நடத்தப்படுகிறது. அதுவும் ஏழைத்தொழிலாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் எதிராக! முனிஸிபல் வீடுகளில் இருக்கும் ஒரு முனிஸிபல் தொழிலாளி பென்ஷனாகியதும், அவன் வேறு போக்கிடமின்றி அந்த வீட்டிலேயே இருக்க முனைந்தால் அவனை வெளியே போடுவதற்கு - நடுத்தெருவில் அவனுடைய குடும்பத்தை நிற்க வைப்பதற்கு! இதற்கெல்லாம் எங்கிருந்து காசு வருகிறதோ?

இப்போது பாதுகாப்புத் தொண்டர் படை (செகியூரிட்டி கார்ட்ஸ்) என்ற வேலையைச் சிருஷ்டித்து, அதற்குப் பலரை எடுத்துள்ளது முனிஸிபல் நிர்வாகம். அவர்களுக்கு காக்கி உடையும், தொப்பியும் (பீகாப்ஸ்) பொல்லும் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் காசு எங்கிருந்து வருகிறது? இந்தப்படையினரும் அவர்களுக்குப் பொல்லும் எதற்கு? தொழிலாளரையும் ஊழியரையும் அடக்க, அடிக்க நொறுக்க. இந்த அடக்குமுறை கருவிகளுக்குச் செலவழிக்க மட்டும் காசுக்குப் பஞ்சமில்லை.

இந்தப் படையினருக்கு பிரதம அதிகாரியாக சதிவழக்கில் அகப்பட்ட ஒருவரை ரூ 950/- சம்பளத்தில் நியமித்திருக்கிறது. இப்படியெல்லாம்பெரும் சம்பளத்தில் ஆட்களை நியமிக்க மட்டும் நிதி தாராளமாக இருக்கிறது. இவற்றிலிருந்து, யு. என். பி. யின் முனிஸிபல் நிர்வாகத்தின் கொடூரமான போக்கைப் புரிந்து கொள்ளலாம். முக்கூட்டரசாங்கத்தின் பக்கம் மக்களின் கவனம் திரும்பி இருக்கிற இன்றைய நிலையில் தனது ஊழல்களையும், தொழிலாளர்கள் ஊழியர்களுக்கு எதிரான போக்கையும் மறைத்துவிட, முனைகிறது யு. என். பி. அரசாங்கத்தில் யு.என்.பி இல்லாவிட்டாலும் அது செத்துவிடவில்லை. கொழும்பு முனிஸிபலிலும், இன்னும் பல இடங்களிலும், நாட்டிலும், சக்தியுடன் இருந்து வருகிறது. முக்கூட்டாசாங்கத்தின் பரபரப்புக்குள் கொழும்பு மக்களும் சரி, நாட்டு மக்களும் சரி, பொது விரோதியான யு. என். பி. யை கணமும் மறந்துவிடக் கூடாது; அதற்கெதிரான போராட்டத்தை இம்மியும் தளர்த்தக் கூடாது.

# 'அறிஞர்' 'கலைஞர்' ஆட்சியில் காண்பதென்ன?

அன்புள்ள தங்கைக்கு

உன் கடிதம் கிடைத்தது. மிக்க நன்றி, இந்தியாவிற்கு நான் வந்தது முதல் உனக்கு கடிதமே எழுதவில்லை என்று குறைப்பட்டிருக்கிறாய். இங்கு வந்த பின்பு, வறுமையின் கொடுமைகளை கண்ட பிறகு— முதலாளித்துவத்தின் கொடிய கரங்கள் மக்களை வருத்துவதை கண்ட பிறகு என் மனதில் போராட்ட உணர்வுகளின் எழுச்சியும், புரட்சி வேட்கையும் மேலோங்கி நிற்கின்றன. இந்த உணர்வுகளின் முன் கடிதம், பாசம், உறவு என்பதெல்லாம் சாதாரண விஷயங்களாக தென்படுகின்றன.

நான் இலங்கையில் இருந்த காலத்தில் இந்தியாவிலிருந்து வந்த அண்ணாதுரையின், கருணாநிதியின் நூல்களையே வாசித்தேன், தமிழ் படங்களை விடாது பார்த்தேன். இவை அனைத்தும் என்ன கூறின என்றால், அண்ணாவின் ஆட்சி ஏற்பட்டால் வறுமை நீங்கி விடும், வீடுகள் பெருகிவிடும் என்று. இதையெல்லாம் நம்பிக் கொண்டு சமதர்ம சமுதாயம் அண்ணாவின் தலைமையில் உருவாகுவதை காண ஓடோடி வந்தேன். ஆனால் நான் கண்டது என்ன?

பசுமைப் புரட்சியைக் காண ஓடோடி வந்தேன் பசி, வரட்சியைக் கண் நிறையக் காண்கிறேன்.

இலங்கையில் நாம் இருந்த தோட்டத்தின் பெரிய கணக்கப்பிள்ளை அடிக்கடி எமது தந்தையிடம் ''அண்மையில் தான் இந்தியாவிற்கு சென்று திரும்பினேன். எத்தனை புதிய கட்டடங்கள்! எத்தனை விதமான கார்கள்! என்ன முன்னேற்றம்! என்ன வளர்ச்சி!'' என்று கூறுவாரே நினைவிருக்கிறதா? அதையெல்லாம் எண்ணும் போது எனக்கு சிரிப்புத்தான் வருகிறது.

சென்னை தெருவழியே சுற்றிப் பார்ப்பவர்கள் உயர்ந்த மெரீனா ஓட்டலின் மாடிகளை மாத்திரம் பார்த்துவிட்டு இந்தியாவின் வளர்ச்சியைப் பற்றி உளறாமல், அந்த ஓட்டலில் எச்சில் இலைகளை வீசும் இடத்தில் மிஞ்சிய சோற்றை எடுப்பதற்காக நாய்களுடன் மனிதன் போராடுவதையும் பார்த்துவிட்டுக் கூறவேண்டும்.

தமிழக அரசின் தலைமைச் செயலக கட்டடத்தின் அழகையும், அளவையும் மட்டும் பார்த்துவிட்டு இந்தியாவின் செழிப்பைப்பற்றி அளக்காமல் இந்த கட்டடங்களின் உள்ளே அமர்ந்து அர்த்தமற்ற, பிற்போக்கு கொள்கைகளை அமுல் நடத்தி வரும் பொறுப்பற்ற தலைவர்களின் ஆட்சியில் நடந்துள்ள கேடுகளை பார்த்துவிட்டு இந்தியாவின் வளர்ச்சியைப் பற்றி கூறவேண்டும்.

கார்கள் பெருகி உள்ளன. இல்லையென்று நான் கூறவில்லை. கட்டடங்கள் பெருகி உள்ளன. இதை நான் மறுக்கவில்லை. ஆனால் தங்கையே எண்ணிப்பார். ஒரு கட்டடம் கட்டும் நிலையிலோ கார் வாங்கும் நிலையிலோ எந்த இந்திய தொழிலாளியாவது இருக்கிறானா? இல்லையே. அப்படியாயின் கட்டடங்கள் வளர்வதும் கார்கள் பெருகுவதும் பெரும்பான்மை வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சியாகுமா? இல்லவே இல்லை. இது முதலாளி வர்க்கத்தின் வளர்ச்சியைத்தான் காட்டுகின்றன.

வறுமையை நீக்குவோம் என்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ள மந்திரிமார் தம் குடும்பங்களில் நிலவி வந்த வறுமையை நீக்கிவிட்டார்கள். வீடற்ற மக்களுக்கு வீடு வசதிகள் செய்து கொடுப்போம் என்று கூறி ஆட்சியில் அமர்ந்த மந்திரிமார் ஆளுக்கொரு வீடு கட்டி கொண்டுள்ளார்கள். இந்த வீடு கட்டுவதற்கு பெற்ற பணம் நியாயமான முறையில் பெறப்பட்டது அல்ல என்று அண்மையில் ஆட்சி மன்றங்களிலேயே நிரூபிக்கப்பட்டதை நீ பத்திரிகையில் வாசித்து இருக்கலாம். மொத்தத்தில் கூறப்போனால் மந்திரிமாரின் வறுமை நீங்கிவிட்டது. அவர்களுக்கு வீடு வசதிகள் பெருகிவிட்டது. ஆனால் அவர்களை ஆட்சி மன்றங்களுக்கு அனுப்பிய குப்பனுக்கு கூழுக்கு வழியில்லை; அவன் குடிசையின் கூரையும் சரிந்துகொண்டிருக்கிறது.

புரட்சி ஒன்று தோன்ற வேண்டும்; போராட்டங்கள் மென்மேலும் வலுப்பெற வேண்டும்; இந்த பழைய ஆட்சி முறைகளும், அரசாங்கமும், ஆள்வோரும் தூக்கி எறியப்பட வேண்டும். அதன் பின் மார்க்சிஸ- லெனினிஸ- மாஓ வழிநிற்கும்- ஓர் அரசு தோன்ற வேண்டும். அது ஒன்றே நம் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியும்.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாகவே காந்தி வழி நின்று ஆட்சி புரிந்த நேரு, சாஸ்திரி, இந்திரா காந்தி என்ற எவருமே நாட்டின் அத்தியாவசிய பிரச்சினைகள் எதற்குமே முடிவுகாணவில்லை. காந்தீயம் தோற்று விட்டது என்பதற்கு சாட்சியாக பசியால் சாகும் மனிதனை இங்கு காணலாம். வேலையற்று, வேறுவழியற்று முறையற்ற செயல்களில் ஈடுபடும் ஒவ்வொரு இளைஞனும் இருக்கிறான். காந்தீயம் தோற்றுவிட்டது என்பதற்கு தகர்த்தெறியப்படும் காந்தியின் ஒவ்வொரு சிலைகளும் சாட்சியாக இருக்கின்றது.

புரட்சியின் கனல் வேகமாக எங்கும் பரவி வருகிறது. வியட்நாமில் கேட்கும் துப்பாக்கி சூட்டின் சப்தம் இந்தியாவில் எதிரொலிக்க தொடங்கிவிட்டது. தமிழ் நாட்டிலே தஞ்சைமாவட்டம், மதுரை, கன்னியாகுமரி, ஆகிய இடங்களில் இயக்கம் வேரூன்றி பரவி வருகிறது. இதற்கு வெற்றி நிச்சயம்.

புரட்சி வணக்கங்களோடு

உன் சகோதரி,

வடிவு

# நிக்ஸனின் புதிய மோசடி

## இந்தோ சீன மக்கள் ஏமாறமாட்டார்கள்

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைவனும், யுத்தக் கொள்ளை நோயின் சிருஷ்டியாளனுமான நிக்ஸன் ஒக்டோபர் 7ந் திகதி இந்தோசீனப் பிரச்சினை சம்பந்தமாக ''பெரும் புதிய ஆரம்பம்'' என்ற திட்டத்தை முன் வைத்துள்ளான். பாலஸ்தீன் கொரில்லாக்கள் மீது பயங்கரத்தாக்குதல்களைத் தொடுக்க ஜோர்தான் பிற்போக்காளர்களைத் தூண்டிவிட்டு மத்திய கிழக்கில் யுத்த பயமுறுத்தல்களை உண்டு பண்ணிவிட்டு, மீண்டும் இந்தோசீனப் பிரச்சினையில் ''சமாதானப் பேச்சுவார்த்தைகள்'' என்ற மோசடி நாடகத்தை ஆடுகின்ருன். நிக்ஸன்

இது, ''இன்று உலகில் புரட்சியே பிரதான போக்காக விளங்கும்'' பிரமாண்டமான சூழ்நிலையில் அமெரிக்க ஏகாதிபத்தியம் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளதையும், அதன் இடர் நிறைந்த போராட்டத்தில் எதிர்ப்புரட்சிகர இரட்டை தந்திரோபாயத்தை அதிகரிக்க முயல்வதையும் காட்டுகின்றது.

நிக்ஸன் முன்வைத்துள்ள பெயரளவிலான ''புதிய ஆரம்பம்'' பிரதானமாக 5 விஷயங்களை உள்ளடக்கியுள்ளது. (1) ''இந்தோசீனம் முழுவதும்'' அல்லது '' அந்தந்த இடத்தில் போர் நிறுத்தம்'' (2) இந்தோசீன மூன்று நாடுகளிலும் காணப்படும் சச்சரவைப் பற்றிய ஒரு சர்வதேச மாநாடு''; (3) ''பூரணத் தீர்வின் ஒரு பகுதியாக முற்றுமுழுதாக வாபஸாவதை ஏற்றுக் கொள்ளும் கால நிர்ணயம் பற்றி பேச்சுவார்த்தை நடத்துதல்''; (4) ''சகல தென் வியட்நாம் மக்களதும் அபிலாஷைகளை உண்மையாகப் பூர்த்தி செய்யும் அரசியல் தீர்வைத் தேடுதல்''; (5) இரு பகுதியினராலும் கைது செய்யப்பட்ட சகல யுத்தக் கைதிகளையும் நிபந்தனை எதுவுமின்றி உடனடியாக விடுதலை செய்தல்.''

நிக்ஸனது இந்த ஐந்து குறிப்புகளையும் சிறிதளவு ஆராயும் ஒருவர், அவை ''சமாதானத்துக்கான புதிய ஆரம்பம்'' அல்ல என்பதையும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அதன் வீழ்ச்சியிலிருந்து பாதுகாக்க நடத்தப்படும் போராட்டம் என்பதையும், முழு இந்தோசீனத்திலும் அதன் ஆக்கிரமிப்பைச் ''சட்டபூர்வமாக்க'' செய்யப்படும் நரித்தந்திரம் என்பதையும் கண்டு கொள்ளலாம்.

நிக்ஸனது ''இடத்தில் போர் நிறுத்தம்'' என்ற சரக்கு எத்தகையது? ''யுத்த நிறுத்தம் வியட்நாம் யுத்தத்தை மாத்திரமல்லாது இந்தோசீனம் முழுவதையும் உள்ளடக்க வேண்டும்,'' ''சகல யுத்த நடவடிக்கைகளை மாத்திரம் நிற்பாட்டாது'', ''இந்த யுத்தத்தில் காணப்படும் சகல பரந்த நடவடிக்கைகளையும் உள்ளடக்க வேண்டும்'', ''இந்தோசீனம் முழுவதிலுமுள்ள சகல ஆயுதப்படைகளும் யுத்த நிறுத்தம் செய்து அவை அவை அப்போது வசப்படுத்தியிருக்கும் இடங்களில் நிற்க வேண்டும். என நிக்ஸனே கூறுகின்ருன். இதுவே ''இடத்தில் போர் நிறுத்தம்'' என்பதன் அர்த்தமாகும்.

இந்தோசீனத்தின் மூன்று நாடுகளிலும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் வால்பிடிகளும், பாதந்தாங்கிகளுமே ஆக்கிரமிப்பாளர்கள், கொள்ளையர்கள், கொலையாளிகள் என்பதும், அங்கு வாழும் மக்கள் ஆக்கிரமிப்பினுல் அகதிகளாக்கப்பட்டுள்ளார்கள் என்பதும் ஒவ்வொருவருக்கும் தெரியும். அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் பாதந்தாங்கிகளும் பல்லாயிரக் கணக்கான துருப்புக்களை இந்தோசீனத்தின் மூன்று நாடுகளுக்குள்ளும் அனுப்பியுள்ளனர். அதே வேளையில் இந்தோசீன மக்கள் ஒரு ராணுவவீரனையாவது அமெரிக்காவுக்குள் அனுப்பவில்லை. இத்தகைய சூழ் நிலையில்தான் ''இடத்தில் போர் நிறுத்தம்'' என நிக்ஸன் உளறுகிருன். இந்தோ சீனுவில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பை சட்டரீதியானது என்று அந் நாடுகளின் மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதல்லவா இதன் அர்த்தம்; மூன்று இந்தோ சீன நாடுகளின் மக்களும் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களை தமது மண்ணிலிருந்து துரத்தியடிக்காது, தமது காட்டுத் தர்பாரை நடத்த அனுமதிக்க வேண்டும் என்பதல்லவா அதன் அர்த்தம்! அமெரிக்க ஏகாதிபத்தயத்துக்கு எதிரானதும், தேச விடுதலைக்குமான எதிர்ப்பு யுத்தத்தை நடத்தும் புனிதக் கடமையை இந்தோ சீன மக்களிடமிருந்து பறிப்பதல்லவா இதன் நோக்கம்! இந்தோ சீன மக்கள் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களின் முன் தலைகுனிந்து சரணடைய வேண்டும் என்பதல்லவா இதன் கருத்து!

''அமெரிக்கா யுத்தத்தை விஸ்தரிக்க என்றுமே முயலவில்லை. நாம் சமாதானத்தை விஸ்தரிக்கவே முயலுகிருேம்'' என நிக்ஸன் கூறுகிருன்.

நாம் நிக்ஸனைக் கேட்க விரும்புவது இதுதான்: பல்லாயிரக் கணக்கான ஆக்கிரமிப்புத் துருப்புக்களையும், தனது கைப்பாவைநாடுகளின் துருப்புகளையும் தென் வியட்நாமுக்குள் அனுப்பியதோடு மட்டுமல், லாதுவட வியட்நாம் மீதும் பயங்கர குண்டு வீச்சு கடத்தியும் ''விஸ்தரிப்பு'' மூல உபாயத்தைக் கடைப்பிடிப்பது யார்? வியட்நாமில் வெற்றிபெற முடியாதெனத் தெரிந்ததும் கம்போடியாவில் பிற்போக்கு சதியை உருவாக்கி வலதுசாரி லொன் நொல்-சிறிக் மதாக் கும்பலை அதிகாரத்தில் அமர்த்தி கம்போடியாவுக்குள் துருப்புக்களை அனுப்பி, சிறிக் மதாக் கும்பலின் பிற்போக்கு ஆட்சிக்கு எதிராக வளர்ந்து வரும் கம்போடிய மக்களின் போராட்டத்தை நசுக்க தாய்லாந்து துருப்புக்களை ஏவியது யார்? விடுதலை செய்யப்பட்டுள்ள லாவோஸிய பிரதேசங்கள் மீது தாக்குதல் தொடுப்பதற்கு லாவோஸ் பிற்போக்காளர்களுக்கு உதவத் தமது விசேஷத்துருப்புக்களையும், தாய்லாந்து துருப்புக்களையும் அதிகமதிகமாக லாவோஸுக்குள் அனுப்பியது யார்? இவை யாவும் ''யுத்தத்தை விஸ்தரிக்கும் முயற்சி'' அல்ல, ''சமாதானத்துக்கான முயற்சி'' என்ருல் நிக்ஸன் போதிக்கும் ''சமாதானம்'' என்பது அமெரிக்க பீரங்கிகளுக்கு கொடுக்கப்பட்ட ''சமாதானம், இந்தோசீனத்தின் மூன்று நாடுகளின் மீதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் அதன் வால் பிடிகளினதும் பிற்போக்கு ஆட்சியை வலியுறுத்தும் ''சமாதானம்''. அமெரிக்க, ஏகாதிபத்தியத்தினுலும் அதன் கைப்பாவைகளினுலும் இந்தோ சீன மக்கள் கொள்ளையடிக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, அடிமையாக்கப்பட்டு, சுரண்டப்படுவதை அனுமதிக்கும் ''சமாதானம்'' என்பது தெளிவாகிறது.

''இந்தோ சீனத்தின் மூன்று நாடுகளினதும் நெருக்கடிகள் பற்றி ஒரு சர்வதேச மாநாடு'' கூட வேண்டும் என நிக்ஸன் கூறுகிருன். ''இந்தோ சீனத்தில் நடைபெறும் யுத்தம் ஒரு துண்டு ஆகும் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. எதுவே, அதன் ஒரு பகுதிக்கு மாத்திரம் வைத்தியம் செய்து அதைக் குணப்படுத்த முடியாது'' எனவும் நிக்ஸன் கூறுகிருன்.

இந்தோ சீனத்தில் நடைபெறும் யுத்தங்களை ''ஒரு துண்டு'' ஆக்கியது யார்? இதைச் செய்தது அமெரிக்க ஏகாதிபத்தியமே அல்லாது வேறு யாருமல்ல. கம்போடியாவுக்கு எதிராக ஆக்கிரமிப்பு நடத்தியதன் மூலமும், லாவோஸில் தனது தலையீட்டை அதிகரித்ததன் மூலமும், வியட்நாம்மீது ஆக்கிரமிப்பு யுத்தத்தை விஸ்தரித்து இந்தோ சீனம் முழுவதும் ஆக்கிரமிப்பு யுத்தமாக அதைமாற்றியது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தினுல் ''ஒரு துண்டு'' ஆக்கப்பட்ட ஆக்கிரமிப்பு யுத்தங்களை முறியடிக்க, பொதுவிரோதிக்கு எதிராக இந்தோசீன மக்கள் மேலும் நெருக்கமாக ஐக்கியப்பட்டு ''ஒருதுண்டு'' ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தை நடத்தத் தூண்டியது அமெரிக்க ஏகாதிபத்தியமே. ''வைத்தியம்'' என கத்துவது ''திருடன்...... திருடன்......'' என திருடனே கத்துவது போன்றதாகும். அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது ஆக்கிரமிப்புத் துருப்புக்களையும், தனது கைப்பாவை நாடுகளின் துருப்புக்களையும் இந்தோ சீனத்திலிருந்து வாபஸ் பெறுவதோடு, அங்குள்ள அதன் வால்பிடிகளுக்கு எந்தவித உதவியையும் வழங்க மறுப்பதனுல் மட்டுமே இந்தோ சீனத்தின் யுத்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க முடியும். 1954-1962ம் ஆண்டுகளின் ஜெனிவா ஒப்பந்தங்களை அமெரிக்க ஏகாதிபத்தியம் கிழித்தெறிந்துவிட்டது. இப்போது, ''1954-1962ம் ஆண்டுகளின் ஜெனிவா ஒப்பந்தங்களின் பிரதான விஷயங்கள் செல்லுபடியாகக் கூடியன'' என வெட்கமின்றி நிக்ஸன் புளுகுகிருன். வெட்கம் கெட்டவன்!

மேலும், முற்று முழுதான வாபஸுக்கான கால நிர்ணயம் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவது பற்றியும் நிக்ஸன் கூறுகிருன். இது வெத்து வேட்டாகும். இந்தோசீன மக்களும் மற்றும் உலக மக்களும் அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புத் துருப்புக்களை இந்தோசீனத்திலிருந்து உடனடியாக முற்றுமுழுதாக வாபஸ் வாங்க வேண்டும் என தமது வலுவான கோரிக்கையை செயற்படுத்திக் காட்டிவிட்டார்கள். ஆனல், நிக்ஸனே, ''பரிபூரண வாபஸுக்கான கால நிர்ணயம் பற்றிய பேச்சு வார்த்தைக்கு'' மாத்திரம் தயார் செய்கிருன். இங்கு அவன் முன்பு பாவித்த ''பரஸ்பர படை வாபஸ்'' போன்ற வார்த்தைகளைப் பாவிக்கவில்லை. ஆனல், அமெரிக்க ஆக்கிரமிப்புத் துருப்புக்கள் வரையறையன்றி நீண்ட காலம் வியட்நாமில் தங்கியிருப்பதற்கு வழி வகுக்கும் பழைய நாடகத்தையே ஆடுகின்ருன்.

நிக்ஸனது பிரேரணையின் நான்காவது, ஐந்தாவது குறிப்புக்கள் தென்வியட்நாம் பிரச்சினைக்கு ''ஒரு அரசியல் தீர்வு'' பற்றியதும், யுத்தக் கைதிகளை விடுதலை செய்வது பற்றியதும் ஆகும். மறுபடியும் அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் ஆக்கிரமிப்பு யுத்தத்தைக் கைவிட்டு அதன் சகல ஆக்கிரமிப்புப் படைகளையும், கைப்பாவைகளின் படைகளையும் இந்தோசீனத்திலிருந்து வாபஸ் பெற்ருல் மாத்திரம்தான் இப் பிரச்சினைகள் தாமாகவே தீர்ந்துவிடும். அதுபற்றி நிக்ஸன் கவலைப்படத் தேவையில்லை. நிக்ஸனே ஒத்துக் கொண்டது போல், அவன் வேண்டி நிற்கும் ''அரசியல் தீர்வு'' தென் வியட்நாமில் பிற்போக்கு கும்பலின் ஆட்சியை நிலைநிறுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதேபோல் கம்போடியாவில் சிறிக் மதாக் பொம்மை ஆட்சியை நிலை நிறுத்துவது பற்றியும் அவன் சூசகமாகத் தெரிவித்துள்ளான்.

நிக்ஸனின் ஆட்சிபீடமும் அமெரிக்க ஏகாதிபத்திய பிரச்சார யந்திரமும், ஆரம்பத்திலிருந்து முடிவுவரை இருட்டு நியாயங்களைக் கொண்ட நிக்ஸனது பிரேரணைக்கு புகழ்மாலை சூட்டி விளம்பரப்படுத்த பெருமளவில் முயற்சி செய்கின்றன. எப்படியிருந்தபோதிலும் அமெரிக்காவிலுள்ள முதலாளித்துவ செய்தி நிருபர்கள் கூட இப் பிரேரணை ''முன்பு ஒவ்வொன்ருக உதைத்துத் தள்ளப்பட்ட பிரேரணைகள்'' போன்றவையே இது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

அண்மையில் நிக்ஸன் தனது ஐரோப்பிய சுற்றுலாவின் போது அயர்லாந்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் பின்வருமாறு கூறியுள்ளான். ''நிக்ஸன் தத்துவம், உலகில் அமெரிக்காவுக்குள்ள பொறுப்புக்களை குறைக்கும் ஒன்று என சில வேளைகளில் தவருக விளங்கப்படுத்தப்படுகிறது. ஆனல், அது உண்மையல்ல. நிக்ஸன் தத்துவத்தின் நோக்கம் மற்றவர்களுடன் அமெரிக்கா செயல்படுவதற்கு ஒரு கொள்கையை வகுப்பதாகும்.''

இக் குறிப்பு இந்தோசீனுவில் அவனது ''சமாதானத்துக்கான புதிய ஆரம்பத்துக்கு'' சிறந்த அடிக் குறிப்பாகும். அவனது ''புதிய ஆரம்பம்'' அமெரிக்க ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை மறைக்கும் புதிய மோசடி என்ற உண்மையை மூடி மறைக்கின்றது.

இந்தோசீன யுத்த பூமியில் அமெரிக்க ஏகாதிபத்தியம் படு கேவலமாகத் தோற்கடிக்கப்பட்டு வருவதாலும், அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக் கொள்கை அமெரிக்க மக்களாலும், உலக மக்களாலும் கடுமையாக எதிர்க்கப்பட்டு கண்டிக்கப்படுவதாலும், நவம்பரில் அமெரிக்காவில் இடைக்கால காங்கிரஸ் தேர்தல்கள் நடைபெறவிருப்பதாலும், அகப்பட்டுள்ள சிக்கலிலிருந்து தான் விடுபடபுதியமோசடி உடனடியாகத் தேவை என்பதை நிக்ஸன் உணர்ந்தான். ஆனல், இந்தோசீனத்தின் மூன்று நாடுகளினதும் மக்கள்-பலவித சோதனைகளுக்கு முகம் கொடுத்து நிமிர்ந்து நிற்கின்ற மக்கள் — எவ்விதத்திலும் ஏமாற மாட்டார்கள். உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புத் தன்மையை நன்ருக அறிந்து விட்டார்கள். அமெரிக்கா ஏகாதிபத்தியத்தின் ''சமகதானப் பேச்சுவார்த்தைகள்'' என்ற மோசடியோ அல்லது அதன் யுத்தப் பயமுறுத்தலோ அதனுடைய இறுதியான அழிவிலிருந்து அதைக் காப்பாற்ற முடியாது.

—பிகிங்ரிவியூ

# எம்.பி.களின் சொத்துக்களை வெளியிட சட்டம் இயற்றாதது ஏன்?

◎ 1-ம் பக்கத் தொடர்

விருந்து வந்தும் கூட இது நிரா கரிக்கப்பட்டுள்ளது. வெளி நாட்டு உல்லாசக் கார்கள் விஷயத்தில் தான் அரசாங்கம் பிழையான வழியில் இறங்கி இருக்கிறது என்றில்லை. மக்களுக்குச் ''சிக்கன வாழ்க்கை'' யை உபதேசிக்கும் அதேவேளையில், அமைச்சர்கள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு நவீன குளிர்சாதன வசதியூட்டப்பட்ட அலுவலகங்களை வலிந்து பெற்றுள்ளார்கள். பழைய பொதுமராமத்து இலாக்காவினுல் (பி. டப்ளியூ. டி.) பூட்டப்பட்ட குளிர்சாதனம் ஒழுங்காக வேலை செய்யவில்லை" என்று தபால் அமைச்சர் பெரிதாக குறை கூறி, தனியார் துறையிலுள்ள தமது பழைய நண்பர் ஒருவர் மூலம் குளிர்சாதன அமைப்பை தனது திருப்திக்கேற்ப சீர்செய்த சிறப்பைப் பற்றி மக்கள் இன்றும்கூட பேசிக்கொள்கிருர்கள். கல்வி அமைச்சருடைய அலுவலகமும் பல்லாயிரக்கணக்கான செலவில் திருத்தி அமைக்கப்பட்டதையும், குளிர்சாதன வசதிப் பூட்டப்பட்டதையும் யாவரும் அறிவார்கள். கல்வி அமைச்சரின் அலுவலகத்தினுள் இருக்கும்போது பெறக்கூடிய சொகுசை அனுபவித்துப் பார்க்க, பெருந்தொகையான மக்கள் கூட்டமாகப் போனதாக ஒரு பத்திரிகையாளர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர்களும், அரசாங்கத் தலைவர்களும் சிக்கனத்திற்கு விரோதமாகச் செய்து வரும் இத்தகைய கேவலமான செயல்களின் பின்னணியில் வைத்துப் பார்க்கும்போது, இரண்டாவது கொத்து அரிசியை வாங்கவேண்டாம் என அமைச்சர் இலங்கரத்ன மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது மிகவும் திமிர்த்தனமானது. அரசாங்கத் தலைவர்கள் அனுவசியமான ஆடம்பரங்களில் வாழ்ந்துகொண்டும், குளிரூட்டப்பட்ட அலுவலகங்களில் இருந்துகொண்டும், பென்ஸ் கார்களில் பவனி வந்து கொண்டும், ஆடம்பரமான விருந்து வைபவங்களில் கலந்துகொள்வதைப் படம் பிடித்து பிரசுரிக்கப்பண்ணிக் கொண்டும் இருக்கும் அதே வேளையில், சிக்கனத்தைப் பற்றி உபதேசம் புரிவது அர்த்தமற்றது மட்டுமல்ல, அவலட்சணமானதும் கூட. இதனுல் சிக்கன வாழ்க்கை முறையை அமைத்திட முடியாது.

இது, ஒரு முக்கியமான விஷயத்தையும் நினைவுபடுத்தத் தவருது. எம். பி. மார் தமது சொத்து விபரங்களை வெளியிடவேண்டும் என்பதுதான் அது. பதுக்கல்காரர்களுக்கு எதிரான சட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்துள்ளது. இதனுல் சிலர் எக்கசக்கமாக அகப்பட்டுமுள்ளார்கள். அதே சமயம், அரசாங்க எம். பி.மார் பற்றியும், அமைச்சர்கள் பற்றியும் வெட்கக்கேடான வதந்திகளும் உலாவுகின்றன. 'சோஷலிஸ அரசாங்கம்'' என்று தன்னைத் தானே தம்பட்டம் அடித்துக் கொள்ளும் இந்த அரசாங்கம், எம். பி. மார்கள் தமது சொத்து விபரங்களை வெளியிடவேண்டும் என ஏன் சட்டம் கொண்டுவரக்கூடாது? இதற்காகவே யு. என். பி. அரசாங்கம் ஒரு மசோதா கொண்டுவந்தது. அது இடையில் நின்றது. தமது எம். பி. மார்கள் தமது சொத்துக்களை தாமே வெளியிடுவதாக முக்கூட்டுக் கட்சிகள் முன்பு கூறின. ஆனுல் இப்போது இதைப்பற்றிப் பேச்சையும் காணேம், மூச்சையும் காணேம். எனவே, மறைத்து வைக்கவேண்டியவர்கள் இரு தரப்பிலும் பலர் உள்ளனர் என்று மக்கள் சந்தேகப்படுவதில் அர்த்தமுண்டு. ஆகவே தான் மக்களிடமிருந்து சிக்கனத்தை எதிர்பார்ப்பதற்கு முன்பு, எம். பி. மார் தமது சொத்து விபரங்களை வெளியிடவேண்டும் என்றும், வெளிநாட்டுக் கார்களை தமது பாவனைக்கு வாங்கக்கூடாது என்றும் நாம் கோருகிரேம். மக்களுக்கான பொதுப் போக்குவரத்துச் சேவை மக்களுக்குப் போதும் என்ருல், ''மக்களுக்குச் சேவை செய்ய'' முன்வந்தவர்களுக்கும் அது போதுமானதே.

# புரட்சிகர புத்திஜீவிகளுக்கு

◎ 3-ம் பக்கத் தொடர்

இன்றைய சமுதாயத்தில் தொழிலாளி வர்க்கமே மிகவும் புரட்சிகர வர்க்கமாகும். ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், பெருமுதலாளித்துவம் ஆகியவற்றிற்கு எதுராக விட்டுக் கொடுக்காத போராட்டத்தை நடத்தக்கூடிய வர்க்கமாகும். தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர தலைமை இல்லாமல் எமது உள்நாட்டு வெளிநாட்டு எதிரிகளைத் தூக்கி எறிய முடியாது.

இப் புரட்சிகரக் கொள்கையை நாம் நன்ருக கிரகித்துக்கொள்ளவேண்டும். ஒரு பக்கம் நவீன திரிபுவாதம், சீர்திருத்தவாதம், மறுபக்கம் வகுப்புவாதம் ஆகிய இவை இரண்டும் புரட்சிகர இயக்கத்தின் பாதையில் பெரும் பாருங்கல்லாக இருக்கிறது. விட்டுக்கொடுக்காமல் போராடி இவை இரண்டையும் தோற்கடிக்கவேண்டும். பங்கலோட்டுத்தனமான பாராளுமன்றப் பாதையை நிராகரித்தல் வேண்டும். சிங்களத் தொழிலாளர்கள், விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள் ஆகியோர் மத்தியில் ஐக்கியத்தைக் கட்டி எழுப்பாமல் இலங்கையில் புரட்சியை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த உண்மையை இந் நாட்டிலுள்ள புத்திஜீவிகள் கிரகித்துக்கொள்ளவேண்டும். இச் சகாப்தத்தில் மிகவும் முன்னேறிய புரட்சிகர தத்துவமான மார்க்சிஸம்—லெனினிஸம்—மாசேதுங் சிந்தனையை அவர்கள் கவனமாகவும், சிரத்தையோடும் படித்து கிரகித்துக்கொள்வதோடு, அதனை இலங்கையில் உள்ள ஸ்தூலமான நிலைமைக்கு ஏற்ப பிரயோகிக்கவும் வேண்டும்.

மாசேதுங் சிந்தனையை, குறிப்பாக கிராமப்புற மக்கள் மத்தியில் பரப்புவதில் புத்திஜீவிகள் முன்னணிப் பாத்திரத்தை வகிக்கலாம், தமது நாட்டுக்காக அவர்கள் இக் கடமையைச் செய்தல் வேண்டும். இக் கடமையை நிறைவேற்றுவதற்காக இந்நாட்டில் உள்ள புரட்சிகர புத்திஜீவிகளை குறிப்பாக வாலிபர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்குப் பின்வரும் அறைகூவலை எமது கட்சி விடுக்கின்றது.

- பங்கலோட்டுத்தனமான பாராளுமன்றப் பாதையை நிராகரியுங்கள்!
- வகுப்புவாதத்தினுல் திசை திருப்பப்படாதீர்கள்!
- மார்க்சிஸம்—லெனினிஸம்—மாசேதுங் சிந்தனையினுல் ஒளியூட்டப்படுகின்ற புரட்சிகரப் பாதையில் முன்னேறிச் செல்லுங்கள்!

# சமசமாஜக் கட்சியின் வட பிரதேசப் பிரமுகர் இ.போ.ச. அதிகாரியான விந்தை

சமசமாஜக் கட்சியின் மத்திய கமிட்டியின் உறுப்பினரும், அவர்களது அகில இலங்கை ஐக்கிய மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் வட பிரதேச உதவிப் பிரதிநிதியும், முழு நேர ஊழியருமான வி. பாலசிங்கம் என்பவருக்கு கடந்த மாதம் இ. போ. ச. வில் 6ம் தரத்தையுடைய திடீர் சோதனைக் குழு அதிகாரியாக நியமனம் கிடைத்துள்ளது. இதன்மூலம் வட பகுதி பஸ் தொழிலாளர்கள் மத்தியில் சமசமாஜக் கட்சியினதும் அவர்களது சுகபோக வாழ்க்கை பற்றியும் தெளிவாகத் தெரிய வந்துள்ளது.

பஸ் தேசியமயமாக்கப்பட்ட பின் இதுவரை இ. போ. ச. வில் வேலை அனுபவம் பெற்ற பலர் இப்பொழுதும் 9ம், 8ம் தரத்தில் இருந்து வேலை செய்து வருகிருர்கள்—எவ்வித பதவி உயர்வும் இல்லாமல். ஆனுல் இந்த சமசமாஜப் பிரமுகருக்கு எப்படி 6ம் தரத்தையுடைய அதிகாரிப் பதவி வந்தது என்பது ஆச்சரியமாக உள்ளது. காரணம் தொழிலாளர்களுக்கே என்ன விஷயம் எனத் தெரியும்.

ஆனுல் எம்மைப் பொறுத்த வரையில் இதில் வியப்பொன்றும் இல்லை. ஏனெனில், ஒரு காலத்தில் தொழிலாளர் தலைவர்கள் எனக் கூறி, மார்க்சிஸம் பேசி இந்த நாட்டில் தொழிலாளர் வர்க்கத்தின் ஆட்சி அமைப்போம், அதற்காக எமது உயிர்களையும், உடமைகளையும் இழப்போம் எனக் கூறி தொழிலாளர் வர்க்கத்தின் மேல் சவாரி விட்டு இன்று ஆட்சிப் பீடத்தில் மந்திரிகளாக வீற்றிருக்கும் என். எம். பெரேராவும், கொல்வினும் பல சொத்துக்களுக்கும், வீடுகளுக்கும் சொந்தக்காரர்களாக மாறி அதை தாம் அனுபவிக்க மேலும் தொழிலாளர்களை உதவியும் தியாகமும் செய்யுமாறு கேட்கும்போது அவர்களது ஏஜண்டுகளுக்கும் பதவிகள், சம்பளம், சொத்துக்கள் கட்டாயமாகத் தேவைதானே!

இது சமசமாஜக் கட்சியில் மட்டுமல்ல, முக்கூட்டு முன்னணியைச் சேர்ந்த இதர கட்சிகளின் நிலைமையும் இப்படியே.

இந் நிலைமையைப் பார்த்து ஒரு பஸ் தொழிலாளி கூறினுர். ''சோஷலிஸம் இந்த நாட்டில் வந்து விட்டது உண்மைதான். ஆனுல் அது தொழிலாளர்களுக்கோ, அல்லது உழைக்கும் மக்களுக்கோ அல்ல, அந்த மக்களின் வாக்குகளை வாங்கிச் சென்ற சீமான்களுக்கும், சீமாட்டிகளுக்கும் தான் சோஷலிஸம் வந்துவிட்டது. எமக்கல்ல. எமக்கு சோஷலிஸம் வரும் காலம் அவ்வளவு தூரத்தில் இல்லை.''

## இருவரது கருணையும் ஒன்றே

யு. என். பி. ஆட்சியில் ஜே. ஆர். ஜெயவர்தன மக்களுக்கு 'இலவச அரிசி' எனக் கூறி அவசர கால சட்டத்தைப் பிரகடனப்படுத்தி மக்களுக்கு எதிராக துப்பாக்கிகளை நீட்டுவதற்கு ராணுவத்திற்கு அனுமதியளித்தார்.

முக்கூட்டணி ''மக்கள் ஆட்சியில்'' ட்ரொட்ஸ்கிய என். எம். பெரேரா புது நோட்டுக்களைக் கொடுத்துவிட்டு பொது ஜனப் பாதுகாப்புச் சட்டத்தின் போர்வையில் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி ராணுவத்தினரை துப்பாக்கிகளுடன் பவனி வரச் செய்தார்.

இவ் விருவரும் மக்கள் மீது எவ்வளவு கருணை காட்டுகின்றனர்;

## முல்லைத்தீவு இ. போ. ச. தொழிலாளர் போராட்டம்

முல்லைத்தீவு இ. போ. ச. டிப்போவில் கடந்த 30ந் திகதி சாரதி ஒருவருக்கும், பொறுப்பதிகாரிக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தில் அதிகாரி சாரதியை தாக்கினுர். இதைக் கண்ட தொழிலாளர்கள் அனைவரும் தொழிற் சங்க வேறுபாடுகளை விட்டு பொறுப்பதிகாரியின் திமிர்ச் செயலை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்ததோடு, உடனடியாக டிப்போவை விட்டு அந்த அதிகாரியை மாற்ற வேண்டும் எனப் போராடினுர்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத் தீவுக்கு வந்த மேலதிகாரிகள் தொழிலாளர்களின் உறுதியான போராட்டத்தைக் கண்டு, அந்த அதிகாரியை 16-10-70குள் இடம் மாற்றுவதாக வாக்களித்தார்கள். அதன்பின் தொழிலாளர்கள் அனைவரும் வேலைக்குத் திரும்பினுர்கள். வாக்குறுதியின்படி 16ந் திகதிக்குள் அந்த அதிகாரியை இடமாற்றம் செய்யாவிட்டால் மீண்டும் போராடுவதற்கு தொழிலாளர்கள் உறுதியுடன் இருக்கிருர்கள்.

## பலாங்கொடை நகரில் செங்கொடி சங்கத்தின் புதிய காரியாலயம்

இலங்கை தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கத்தின் பலாங்கொடை காரியாலயம், பலாங்கொடை நகரில், மார்க்கட்டுக்கு அருகிலுள்ள எண். 1/9, மெயின் வீதியில் திறக்கப்பட்டுள்ளது.

பலாங்கொடை பிரதேச தொழிலாளர்களின் வேண்டுகோளுக்கு கிணங்க. அவர்களின் வசதிக்காக பலாங்கொடை நகரில் செங்கொடி சங்கத்தின் காரியாலயம் திறக்கப்பட்டிருப்பது தொழிலாளர்களிடையே மகிழ்ச்சியைத் தந்துள்ளது.

## ட்ரொட்ஸ்கியப் புரட்சி

''மக்கள் ஆட்சி''யில் ட்ரொட்ஸ்கியத் தலைவர்களின் கீழுள்ள இ. போ. ச. மாட்டு வண்டி வேகத்தில் சேவை புரிகிறது. பஸ் கியூக்கள் அனுமார் வால்போல நீண்டு செல்கிறது. பஸ்ஸில் பிரயாணம் செய்ய வேண்டியவர்கள் தமது மத்தியானச் சாப்பாட்டையும் கூடவே கொண்டுபோக வேண்டியிருக்கிறது. அதே வேளையில், ட்ரொட்ஸ்கிய ''புரட்சிவாதி''யான இ.போ. ச. தலைவர் இ. போ. ச. காரியாலய வேலைகளைத் துரிதப்படுத்துவதற்கு கம்பியூட்டர் இயந்திரங்கள் கொண்டுவரப் போகிருராம்.

இதுதான் ட்ரொட்ஸ்கியவாதிகளின் புரட்சி போலும்?

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஜயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: தொழிலாளி அச்சகம், 121, யூனியன் பிளேஸ், கொழும்பு-2